பக்கங்கள்: எட்டு+XVI=24

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 3 புதன்கிழமை (19.08.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 266

# வெள்ளத்தால் பாதிப்புற்ற அகதிகளை வேறு இடங்களுக்கு மாற்ற ஏற்பாடு

## மீள்குடியேற்றம் இப்போதைக்கு இல்லை என்று பிரதமர் அறிவிப்பு

கொழும்பு, ஒகஸ்ட் 19

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள வவுனியா அகதி முகாம்களில் உள்ள சுமார் மூன்று லட்சம் அகதிகளைத் தற்காலிகமாக வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அரசு நேற்று நாடாளுமன்றில் அறிவித்தது.

ஆனால், கண்ணிவெடிகள் முற்றாக அகற்றி முடிக்கப்படும்வரை - இப்போதைக்கு - அந்த மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த் தப்படவே மாட்டார்கள் என்றும் அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க உறுதிபடத் தெரிவித்தார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச்சுடர்

நாளை

★தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக நடத்தப்படும் விசேட பயிற்சிப் பரீட்சையில் மேல்மாகாண பிரபல ஆசிரியர் தயாரித்து வழங்கும் விசேட மாதிரி வினாத்தாள்.

## நல்லைப்பதி முருகனுக்கு இன்று தேர்த்திருவிழா



யாழ்ப்பாணம், ஒக.19

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்த சுவாமி ஆலய பெருந்திருவிழாவில் முருகப்பெருமான் இன்று தேரில் வலம் வந்து அடியார்களுக்கு அருள்காட்சி அளிப்பார்.

இன்று அதிகாலை 4.30 மணிக்கு அபிஷேகம், பூசை இடம்பெற்று 6 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெறும். அதைத் தொடர்ந்து ஏழு மணிக்கு வள்ளி, தெய்வானை சகிதம் கந்தக்கட வுள் தேரில் ஏறி வலம் வருவார்.

குடாநாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து இன்றையதேர்த்திருவிழாவில் கூடும் பல்லாயிரக் கணக்கான பக்தர்களும் வேலவனைக் கண்டு தரிசிப்பதற்கான ஏற்பா டுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

(உதயன் வழங்கும் 16 பக்கத் தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் உள்ளே)

## தமிழர்களுடன் அதிகாரத்தைப் பகிர்வதில் தாமதம் காட்டினால் புலிகள் மீண்டும் செயற்பட புதிய வாய்ப்பை வழங்கும்

### அமெரிக்க உதவி அமைச்சர் எச்சரிக்கிறார்

கொழும்பு, ஒக.19

இலங்கை அரசு தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதைத் தாமதப்படுத்துவது விடுதலைப் புலிகள் மீண்டும் செயற்படத் தொடங்குவதற்கான புதிய வாய்ப்புகளை வழங்கிவிடும் என்று அமெரிக்கா மீண்டும் எச்சரித்துள்ளது.

பி.பி.சிக்கு வழங்கியுள்ள பேட்டியில் அமெரிக்காவின் தென்னாசியாவுக்கான உதவி வெளிவிவகார அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் தாமதமாவது குறித்த மேற்குலகின் ஏமாற்றத்தைத் தனது இந்த எச்சரிக்கை மூலம் ரொபேர்ட் ஓ பிளேக் வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் இலங்கை நிலைமை குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

சிறுபான்மைத் தமிழ் மக்களுடன் இலங்கை அரசு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளத் தவறுவதன் மூலம் தமிழ் மக்களை அவர்கள் மேலும் தனிமைப்படுத்தக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அகதி முகாம் மக்களை டக்ளஸ் சந்திப்பார்

யாழ்ப்பாணம், ஒக.19

மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள வவுனியா முகாம் மக்களை இன்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்திக்க உள்ளார்.

அங்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை நேரில் பார்வையிட்டு, மக்களின் கஷ்டங்களை அமைச்சர் கேட்டறிவார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 15,000 குடும்பங்கள் வவுனியா முகாம்களில் இருந்து இங்கு அனுப்பப்படும்

கொழும்பு, ஒக.19

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் குடும்பங்கள் விரைவில் அங்கு மீளக்குடியமர்த் தப்படும்.

மீள்குடியமர்வு மற்றும் அனர்த்த நிவாரண அமைச்சர் றிசாத் பதியுதீன் இத்தகவலைத் தெரிவித்தார்.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் உள்ள நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ளவர்களில் 15 ஆயிரம் குடும்பங்கள் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என இனங்காணப்பட்டுள்ளனர்.

பருவமழை காரணமாக மோசமாகிவரும் காலநிலையைக்கருத்தில் கொண்டு இவர்களை யாழ். மாவட்டத்தில் விரைவில் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களின் விவரங்கள் பொலிசாருக்கும், யாழ்.அரச அதிபருக்கும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் யாழ்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அகதி முகாம்களில் மக்கள் படும் அவலங்களை ஜனாதிபதி ஒரு முறையேனும் வந்து பார்க்க வேண்டும்

### ஆனந்தசங்கரி சொல்கிறார்

வவுனியா, ஒக.19

இந்த நாட்டின் பிரசைகளான மக்கள் அகதி முகாம்களில் படும் அவலங்களை, நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி ஒரு தடவையேனும் வந்து நேரில் பார்க்கவேண்டும்.

இப்படித் தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி.

வவுனியாவுக்கு நேற்று வருகைதந்த ஆனந்தசங்கரி முகாம்களுக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடினார். அவர்களின் நிலைமைகளை ஆராய்ந்தார்.

தனது விஜயம் குறித்து பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்ததாவது :-

எலி தனது குஞ்சுகளுடன் வாழக்கூடிய தரத்தில் அமைந்துள்ள சின்ன குருவிக் கூடுகளுக்குள் எமது மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் அவலத்தைக் கண்டேன்.

இடம்பெயர்ந்து மூன்று மாதங்களாக வாழும் வாழ்க்கையை எண்ணி அவர்கள் மனம் வெதும்பி நிற்கிறார்கள். 3 அல்லது 4நாளில் அல்லது 15 அல்லது 20 நாள்களில் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லலாம் என்று எண்ணிய மக்கள் 3 மாதங்களையும் கடந்து அனுபவிக்கும் தொடர் அவலத்தை என்னிடம் கூறி கண்ணீர் வடித்தனர்.

துயரம் தோய்ந்த அந்த மக்களின் அவ

(08 ஆம் பக்கம் பார்க்க)


## அநுராதபுரம் பொலநறுவையில் 8 தமிழ் இளைஞர்கள் கைது!

கொழும்பு, ஒக.19

அநுராதபுரம் மற்றும் பொலநறுவை பிரதேசங்களில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில் 8 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

விசேட அதிரடிப்படையினர் நடத்திய இந்தச் சோதனை நடவடிக்கையில் பல தமிழர்கள் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் உப அதிபர் அருட்திரு. P.பேசுநேசன் அடிகளாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கை ஆக்குவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி.

(88002)


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



தோற்றம்:
10.04.1944

மறைவு:
19.07.2009

### அமரர் சின்னத்துரை கணேசலிங்கம்

கடந்த 19.07.2009 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (20.08.2009) வியாழக்கிழமை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான அன்னதான மண்டபத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மேலும் எமது ஞாபகத்திற்கப்பாற்பட்ட நிலையில் யாரையும் அழைக்கத் தவறியிருப்பின் அதனைப் பெருமையுடன் மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

'ஆனந்தவாசா',
வவுணாவத்தை,தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
02.06.1928

மறைவு:
20.07.2009

### அமரர் மரியநாயகம் காணிக்கைமுத்து

(நல்லபிள்ளை)

மாதகலைப் பிறப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட மரியநாயகம் காணிக்கை முத்து (நல்லபிள்ளை) கடந்த 20.07.2009 அன்று யாழ்.நகரில் காலமானார். அன்னாரது ஆன்ம சாந்தி திருப் பலி இன்று (19.08.2009) புதன்கிழமை யாழ்.புனித யுவானியார் ஆலயத்தில் காலை 6 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. இத்திருப்பலியில் பங்கு பற்றி அன்னாரது ஆன்ம சாந்திக்காக வேண்டுமாறும் பின்பு 53/1, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்திலும் பங்கு பற்றுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(88004)

ம.ஜெகநாதன், சிவபாதா உரிமையாளர்,
53/1, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## நயினாதீவில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு; சாட்டியில் இருந்து எடுத்துச் செல்ல ஏற்பாடு

நல்லூர்,ஓக.19

நயினாதீவில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து வேலணை சாட்டியில் இருந்து நயினாதீவுக்குக் குடிதண்ணீர் எடுத்துச் செல்லப் படுகின்றது.

நயினாதீவில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினையை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் வேலணை பிரதேச செயலர் மு. நந்தகோபாலனின் முயற்சியினால் சாட்டியில் இருந்து பவுசர்கள் மூலம் குறிகாட்டுவானுக்கு எடுத்துவரப்படும் குடிதண்ணீர் அங்கிருந்து படகின் மூலம் நயினாதீவுக்குக் கொண்டு செல்லப்பட்டு உழவு இயந்திரம் மூலம் மூன்று கிராமஅலுவலர் பிரிவுக்கும் விநியோகிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தினசரி 8ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் சாட்டியில் இருந்து நயினாதீவுக்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும் கூறப்பட்டது.

## முருகன் இருப்பிடம் திரும்பிய பின்பே காவடிகள் உள்ளே அனுமதிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஓக.19

இன்று நடைபெறும் நல்லைக் கந்தன் தேர்த்திருவிழாவுக்கு காவடி எடுப்பவர்கள் தேரில் முருகன் ஆரோகணித்து இருப்பிடத்துக்கு திரும்பிய பின்னரே ஆலய வீதிக்குஅனுமதிக்கப்படுவர் என்று மாநகர சபை அறிவித்துள்ளது.

தமது நேர்த்தியை நிறைவேற்றுவதற்கு காவடி மற்றும் பறவைக் காவடி எடுப்பவர்களை உற்சவகால வீதித்தடைகள் ஊடாக முற்பகல் 10 மணிக்கு பின்னரே அனுமதிக்குமாறு மாநகர சபையினர் வீதித்தடை அதிகாரிகளுக்கு பணித்துள்ளனர். (1-111)

## சிகை அலங்கரிப்பு நிலையங்கள் புதன் கிழமைகளில் மூடப்படும்

யாழ்ப்பாணம், ஓக.19

வடமராட்சிப் பகுதியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்கள் இன்று முதல் பிரதி புதன்கிழமைகளில் விடுமுறைக்காக மூடப்படவிருக்கின்றன.

வடமராட்சி சிகை ஒப்பனையாளர் சங்கம் கூடி ஆராய்ந்து எடுத்த முடிவுப்படி புதன்கிழமைகளில் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மூடப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (1)

## அறிவித்தலின்றி தடைப்படும் மின்சாரத்தால் நெருக்கடி

யாழ்ப்பாணம், ஓக.14

கடந்த சில நாள்களாக அறிவித்தல்கள் எதுவுமின்றி குடாநாட்டில் பல பகுதிகளிலும் மின்சாரம் தடைப்படுவதால் பாவனையாளர் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு மின்சாரம் தடைப்படுவதால் அவசர வேலைகளைச் செய்யமுடியாதுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

முன் அறிவித்தலுடன் மின்தடை ஏற்படுத்தப்படும் பட்சத்தில் தேவையான ஒழுங்குகளை முன்னரே செய்து வைக்க முடியும் என்றும் மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தை உரிய அதிகாரிகள் ஏன் கவனத்தில் எடுக்கவில்லை என்றும் கேள்வி எழுப்புகின்றனர். (203-20)

## உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சந்திப்பு இன்று

யாழ்ப்பாணம், ஓக.19

உடற்கல்வி டிப்ளோமாதாரர்களின் சந்திப்பு ஒன்று இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளம் உயர் கல்வி நிறுவனத்தில் இடம் பெறவுள்ளது.

உடற்கல்வி டிப்ளோமா தாரிகள் அனைவரையும் தமது சுயவிவரக் கோவையுடன் தவறாது கலந்துகொள்ளுமாறு உடற் பயிற்சி டிப்ளோமாதாரிகள் சங்கம் கேட் கப்பட்டுள்ளது. (203)

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.19

தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் தொடர்பாக யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை யாழ்.புதிய உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

31.12.2005 ஆம் திகதி மூன்று வருடங்கள் தொண்டராசிரியர் சேவையை நிறைவு செய்த பதிவு செய்த தொண்டராசிரியர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகம் தருமாறு தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (201)


### தவறிவிட்டது

பொ.அற்புதகுமார் என்பவரது மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடு (NPUM7045) 17.08.2009 திங்கட்கிழமை யாழ்.பிரதான [illegible] 30, சுவாட்ஸ் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.
தொ.பே: 021 222 8009



## Kumar Bake House

தரமான பாண், பணிஸ், கேக் வகைகளுக்கு நாடுங்கள்.

Kumar Bake House

குமார் பேக் ஹவுஸ்

பாஷையூர், யாழ்ப்பாணம்.


உ

கோப்பாய் பழைய வீதி, நாச்சிமார் கோயில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும்

## சமய அறிவுப் போட்டி

### போட்டி விதிகள்

1.இப்போட்டியில் வயது வேறுபாடின்றி யாவரும் பங்குபற்றலாம்.
2.பங்குபற்றும் மாணவ சமூகத்தினர் தங்கள் விடைத்தாளில் தங்கள் பாடசாலையின் பெயரையும் குறிப்பிடவும்.
3.போட்டியில் வெற்றிபெறும் மூவருக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் மேலும் பத்து ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.
4.போட்டி முடிவு திகதி - 25.08.2009
5.விடைகளை ''சமய அறிவுப் போட்டி விடைகள்'' என கடித உறையின் மேற்பக்கத்தில் குறிப்பிட்டு, சமய அறிவுப் போட்டி நாச்சிமார் கோயில் பழைய வீதி, கோப்பாய் அல்லது சமய அறிவுப் போட்டி, வீரபத்திரர் கோயில், கோப்பாய் என்னும் முகவரிக்கு தபால் மூலமோ, நேரிலோ அனுப்பி வைக்கலாம்.
6.போட்டி அமைப்பாளர்களின் தீர்ப்பே இறுதியானது
7.வெற்றிபெற்றோருக்கான பரிசில்கள் ஆலயத்தின் பூங்காவனத் திருவிழாவன்று (28.08.2009) வழங்கப்படும்.
8.போட்டி வினாப் பிரதியொன்று ரூபா பத்துக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

**வினாப் பத்திரங்கள் கிடைக்கும் இடம்**

* கோப்பாய் தெற்கு, பழைய வீதி, நாச்சிமார் கோயில்.
* கோப்பாய் வீரபத்திரசுவாமி கோயில்
* பரமேஸ்வரன் ஆலயம், பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

நாச்சிமார் கோயில்,
பழைய வீதி, கோப்பாய். சோ.இ.பிரணதார்த்திஹரக்குருக்கள்.

(சி/560367)

## கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்



ராமநாதன் செல்வமூர்த்தி (S.R)

மச்சான் ராசா ஊர் போற்ற வாழும்
நாளினிலே கவிதாவை
கைப்பிடித்து சில மாதங்களிலே
காலன் உனை அழைத்தானோ.



நவரத்தினம் சிவபுனிதம் (வசந்தி)

அக்கா... வசந்தி அக்கா
நினைக்கவே கனக்கிறது நெஞ்சம்
வசந்தி அக்கா என்று
இனி எப்போது அழைப்பேன்.

ஆறுதல் கூற ஆயிரம் பேர் வந்தாலும்
ஆறாது எம் நெஞ்சம் - உங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(88005)

நீர்வேலி.

சி.சிவகாமி, சி.சிவரூபன்.

## மரண அறிவித்தல்

### திருமதி பரிமளம் சவுந்தரராஜா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான இளைப்பாறிய ஆசிரியையான திருமதி பரிமளம் சவுந்தரராஜா 17.08.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற J. E. சவுந்தரராஜாவின் அன்பு மனைவியும், Dr.பிரேமினி, காலஞ்சென்ற வசந்தகுமார், காலஞ்சென்ற றதினி (தயாலோஜினி) மற்றும் திருக்குமாரன், சாந்தினி, ரவீந்திரகுமாரன் ஆகியோரின் அருமைத் தாயாரும், செல்வம்அரியரட்ணம், சுகந்தி, காலஞ்சென்ற ஜெரோம் மற்றும் Dr.கிருபை, டானியல், மரீனா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அன்னரட்ணம், ஞானம்மா, அரியரட்ணம், சற்குணம், அருளம்மா, நவரட்ணம் மற்றும் R. J. குணரட்ணம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (19.08.2009) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் ஜாவத்தை பொது மயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
திருமதி சாந்தினி டானியல்.

(சி-560063)

*4 B, 1/1, Gangadara Mawatha,*
*Off Templer's Road, Mount Lavinia*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தொடர்கிறது கலைஞரின் 'கவலை'!

ஈழத் தமிழரின் இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழக மக்களுக்குக் கயிறு விடும் விதத்தில் முரசொலி நாளிதழில் கடிதமும், தமிழக அரசு சார்பில் பகிரங்க அறிக்கையும், தமது சார்பிலும் தமது கழகம் சார்பிலும் 'ஸ்டண்ட்' அறிவிப்புகளும் விடுப்பதைத் தவிர, வேறு பயன் தரும் நடவடிக்கை ஏதும் எடுப்பதற்கு அருகதையற்றவர் தாம் என்பதைத் தமது தொடர் செயல் நடவடிக்கைகள் மூலம் நிரூபித்துவரும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, அந்த வரிசையில் மற்றொரு கடிதத்தை இந்திய மத்திய அரசுக்கு இப்போது அனுப்பி வைத்திருக்கின்றார் எனச் சென்னைச் செய்திகள்தெரிவிக்கின்றன.

இம்முறை, வன்னியில் தடுப்பு முகாம்களில் பேரவலப்படும் தமிழ் அகதிகளின் அவசர, அவசிய மனிதாபிமானத் தேவைகளை விரைந்து நிறைவு செய்வதற்கு இந்திய மத்திய அரசு மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழக முதல்வர் தமது கடிதத்தில் வற்புறுத்தியிருக்கின்றாராம்

இந்திய மத்திய அரசு, இராஜதந்திர ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இலங்கை அரசு மீது அழுத்தங்களைப் பிரயோகித்து, வன்னி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அகதிகளின் அவலநிலையைப் போக்க முன்வர வேண்டும் என அவர் இக்கடிதத்தில் கோரியிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதுவும், தமிழகத்தில் ஐந்து சட்டசபைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல், வாக்களிப்பு நேற்று இடம் பெறவிருக்கையில், இப்படி ஈழத் தமிழ் அகதிகள் குறித்து முதலமைச்சர் 'முதலைக் கண்ணீர்' வடிப்பது போன்ற விடயங்களுடனான கடிதம் பற்றிய இந்தச் செய்தி தமிழகத்தில் - சந்தர்ப்பம், சூழ்நிலை பார்த்து - நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டிருக்கின்றது.

யுத்த களத்தில் பல்லாயிரம் இலங்கைத் தமிழர்கள் சிக்கி, ஆயிரக்கணக்கில் மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்ட பேராபத்து சூழ்ந்த சமயத்தில் கூட -

இந்திய மத்திய அரசு ஆட்சியில் இருப்பதற்கான நாடாளுமன்றப் பலத்துக்கு கலைஞர் கருணாநிதியின் தி.மு. கவில், ஆளும் இந்திரா காங்கிரஸ் அரசு முற்றும் முழுதாகத் தங்கியிருந்த அந்தவேளையிலும் கூட -

கலைஞர் கருணாநிதியால் இலங்கைத் தமிழர்கள் குறித்து புதுடில்லி ஆளும் தரப்புக்குத் தாம் எழுதிய இத்தகைய கடிதங்கள் மூலம் காரியம் எதையும் சாதிக்க முடியவில்லை. வெறும் விட்டேத்தி அறிக்கைகளாக -ஊடகங்களில் செய்திகளாக - அவை வெளியானமையைத் தவிர, அக்கடிதங்கள் இலங்கைத் தமிழர்களுக்கு அவர்களின் பேரவலங்களில் இருந்து மீட்சி பெறுவதற்கு எத்தகைய பயனுள்ள உதவியையும் பெற்றுத் தரவில்லை என்பதே உண்மையாகும்.

தேவையானால், இலங்கைத் தமிழர்களின் நலன் பற்றிய தமது கரிசனை காரணமாக இத்தனை கடிதங்களைக் கலைஞர் கருணாநிதி மத்திய அரசுக்கு எழுதினார் என அக்கடிதங்களைத் தொகுத்து அங்கம், அங்கமாக, புத்தகங்களாக வெளியிட முடியும். இலங்கைத் தமிழரின் அவலங்கள் போக்கத் தமது பேனா மை தீர இவ்வளவு கடிதங்களை மத்திய அரசுக்கு எழுதிக் கிழித்து 'கின்னஸ்'சாதனை படைத்தார் அவர் என்று குறிப்பிட முடியும். அதற்கு அப்பால் அக்கடிதங்களால் பெரும் பயன் ஏதும் விளைந்தது இல்லை என்பது வெளிப்படை.

மத்திய அரசின் நாடாளுமன்ற ஆட்சிப் பலத்தைத் தீர்மானிக்கும் வலு கலைஞரின் தி.மு.கவுக்கு இருந்தபோதே - கடந்த மே மாதத்துக்கு முந்திய இந்திய மத்திய அரசின் ஆட்சியின் போதே - கலைஞரின் இலங்கை விவகாரத்தை ஒட்டிய கடிதங்களும், அறிக்கைகளும், அறிவிப்புகளும் புதுடில்லியில் கிடப்பில் போடப்பட்டிருக்கையில் -

இப்போது மத்தியில் தனித்துத் தனது ஆட்சியை ஆளும் நிலையை இந்திரா காங்கிரஸ் உறுதிப்படுத்திய நிலையில், கூட்டணிக் கட்சி என்று ஒட்டிக் கொண்டும், தொங்கிக் கொண்டும் தி.மு.க. அத்தரப்பில் நீடிக்கும்போது, கலைஞரின் கருத்து புதுடில்லியில் புதிதாக எடுபடும் என்று நம்புவதற்கு இங்கு யாரும் முட்டாள்கள் அல்லர்.

தமிழக இடைத்தேர்தல் வாக்களிப்பு சமயத்தில் இலங்கைத் தமிழர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் அவரது எத்தனமும், அதற்கும் பின்னால் புதைந்து கிடக்கும் அப்பட்டமான நடிப்பும் உலகத் தமிழர்கள் இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடியவையே.

'உலகத் தமிழர்களின் தலைவராக' மிளிர வேண்டியவர் 'உலகத் தமிழர்களின் தலைவிதியாக' மாறிப்போன சோக வரலாற்றைத்தான் கலைஞர் தமது சாதனையாகப் படைத்துச் செல்லப்போகின்றார் என்பதும் இப்போதே அறுதியிட்டுக் கூறக்கூடிய விடயமாகும்.

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றும் அதி தீவிர முயற்சிகள் என்ற பெயரில் அவரது இயக்கத்தில் ('டைரக்ஷனில்') நடத்தப்பட்டு ஒப்பேற்றப்பட்ட -

மத்திய அரசுக்குக் காலக்கெடு விதித்து, பதவி விலகல் என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட இராஜினாமா மிரட்டல் நாடகம் -

மனித சங்கிலிப் போராட்டம் என்ற பெயரிலான பெரும் எடுப்புச் செயற்பாடு -

நான்கு மணி நேரம் மட்டும் நீடித்த 'சாகும்வரையான' உண்ணாவிரதப் போராட்ட 'ஸ்டண்ட்' -

சர்வகட்சிகளுடனும் சென்று புதுடில்லியை மிரட்டிக் காலக்கெடு விதிக்கும் 'சூப்பர் காட்சிகள்' -

இப்படி இலங்கைத் தமிழரின் பேரவலச் சிக்கலைத் தனது அரசியல் சுயநலனுக்காகப் புரட்டிப்போடும் கலைஞரின் தொடர் தந்திரோபாய யுக்திகளின் மற்றொரு அங்கமாக, இடைத்தேர்தல் வாக்களிப்பு சமயத்தில் மற்றொரு கடித நாடக அங்கம் இப்போது அரங்கேற்றப்பட்டிருக்கின்றது. அவ்வளவே!

# நாகர் கோயில் பாதுகாப்பு வலயத்திலுள்ள ஆலயங்களில் நித்திய பூசை வழிபாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை

வடமராட்சி, ஓக.19

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள பூர்வீக நாகதம்பிரான் கோயில், அம்மன் கோயில் ஆகியவற்றில் நித்திய பூசைகளை ஆரம்பிக்க நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பிரதேச மக்கள் இடம்பெயர்ந்ததையடுத்து இக்கோயில்களும் கைவிடப்பட்டிருந்தன. அண்மையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து இக்கோயில்களைச் சென்று பார்வையிட தர்மகர்த்தாக்களுக்கும், மக்களுக்கும் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இக் கோயில்களைப் பார்வையிட்ட தர்மகர்த்தாக்களும், மக்களும் கடந்த இரு ஞாயிற்றுக்கிழமைகளில் அக் கோயில்களுக்குச் சென்று துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டு, கோயில்களிலிருந்து சிறு சிறு திருத்த வேலைகளையும் மேற்கொண்டனர். இவற்றிற்கெல்லாம் படைத்தரப்பினர் அனுமதியை வழங்கியிருந்தார்கள்.

இதனையடுத்து நாகர்கோயில் பூர்வீக நாகதம்பிரான் கோயிலில் எதிர்வரும் 23ஆம் திகதி பாலஸ்தானம் செய்யப்பட்டு தினப்பூஜைகள் ஆரம்பிக்கப்படும் என பரம்பரைத் தர்மகர்த்தா எஸ்.சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார். தொடர்ந்து கோயில் மூலஸ்தானப் பகுதியில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு விரைவாகக் கும்பாபிஷேகம் நடத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாகர் கோயில் அம்மன் கோயிலிலும் பிராயச்சித்தப் பணிகள் மேற்கொள் ளப்பட்டு, அதனைத் தொடர்ந்து தினப் பூசைகளை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக் கோயில்களைப் பார்வையிட்டு தினப் பூஜைகளை மேற்கொள்ள உரிய ஒழுங்குகளைச் செய்து தந்த வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் மா. ஸ்ரீஸ்கந்தகுமார், சமூகநலத்துறை மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு இப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.(50-236)

# வடமராட்சி சுப்பர்மடம் கடற்பிரதேசத்திலும் கடற்றொழிலுக்குக் கடந்த திங்கள் முதல் அனுமதி

கரவெட்டி,ஓக.19

வடமராட்சி வடக்கு சுப்பர்மடம் கடற்பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதிக் கடற்றொழிலாளர்கள் நீண்டகாலத்தின் பின்னர் அந்தப் பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பான நிகழ்வு ஒன்று நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் சுப்பர்மடம் கடற்கரையில் நடைபெற்றது. அப்பகுதிக்குப் பொறுப்பான படையதிகாரி கேணல் டி.எம்.பி.கட்டுகம்பொல மீனவர்களைத் தொழில் செய்ய அனுமதித்து மீன்பிடித்தொழிலை வைபவரீதியாக ஆரம்பித்துவைத்தார்.

இப்பகுதியில் கடற்றொழில் மேற்கொள்வதற்கு நீண்டகாலமாகத் தடை விதிக்கப்பட்டிருந்தது. குடாக்கடலில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட போதும் இப்பகுதியில் தொழில் செய்வதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லையென அண்மையில் நடைபெற்ற 'வடக்கின் வசந்தம்' மீளாய் வுக் கூட்டத்தின்போது வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறி, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடம் சுட்டிக் காட்டப்பட் டது. இதுதொடர்பாக அப்பகுதிக்குப் பொறுப்பான படைஅதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் உறுதியளித்திருந்தார்.

இதனையடுத்து அண்மையில் அப்பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டுப் படையதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

இதன் பின்னர் நேற்று முன்தினம் முதல் அப்பகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆரம்ப வைபவத்தில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ:எமிலியாம்பிள்ளை மற்றும் சமாசப் பிரதிநிதிகள், படைத்தரப்பினர் முதலியோர் கலந்து கொண்டனர்.

(50-70-236)

# நல்லூர் தேர், தீர்த்த திருவிழா நிகழ்வுகள் இலங்கை வானொலியில் நேரடி அஞ்சல்

கொழும்பு,ஓக.19

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாக்களின் நிகழ்வுகள் இம்முறை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் நல்லூரில் இருந்து நேரடி அஞ்சல் செய்யப்படும்.

பல வருடங்களின் பின்னர், நாட்டில் அமைதி நிலவும் இந்த வேளையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சம ரசிங்கவின் பணிப்புரைக்கு அமைய ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் வீ.ஏ. திருஞானசுந்தரத்தின் வழி காட்டிலின் கீழ்இந்த ஏற்பாடுகள்செய் யப்பட்டுள்ளன.

இன்று புதன்கிழமை காலை 7 மணியில் இருந்து 9 மணி வரையும்தேர்த்திருவிழா நிகழ்வுகளும் நாளை வியாழக்கிழமை காலை 7மணி முதல் 9 மணி வரையும் தீர்த்தத் திருவிழா நிகழ்வுகளும் அஞ்சல் செய்யப்படும்.

இந்த நேரடி அஞ்சலை தமிழ்ச் சேவை, தென்றல், கொழும்பு சர்வதேச ஒலி பரப்புச் சேவை, யாழ். சேவை மற்றும் www. slbc.lk என்ற இணையத் தளத்தினூடாகவும் உலகெங்கும் வாழும் இந்து மக்கள் கேட்பதற்கான ஏற்பாடுகளை தமிழ்ச்சேவை மேற்கொண்டுள்ளதென தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் ஆர்.கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நல்லூர் ஆலயத்தில் இருந்து நேர்முக வர்ணனையில் இம்முறை யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன். யாழ். பல் கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் ஆறு. திருமுருகன் ஆகியோர் இணைந்து கொள்கின்றார்கள்.

இந்த நேரடி நிகழ்வுகளை தமிழ்ச் சேவையின் அறிவிப்பாளர் முருகேசு ரவீந்திரன் தொகுத்து வழங்குகின்றார். தயாரிப்புப் பணிகளை ஜீ. சிவசங்கர் மேற்கொள்கின்றார். (50)

# உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 13 பயனாளிகளுக்கு வீடமைப்புக் கடன்

வலி.வடக்கு, ஓக.19

உடுவில் பிரதேசசெயலர் பிரிவில் வீடமைப்பு அதிகார சபையினால் 13 பேருக்குத் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் வீடமைப்புக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்காக இக்கடன் தொகை குறைந்த வட்டியில் வழங்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு அதிகார சபையின் அலுவலர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதனைவிட மேலும் 05 பேருக்கு வீடமைப்புக் கடன் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே வீடமைப்பு அபிவிருத்தி செயற் திட்டங்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் தொடர்ந்தும் தேவை உடையவர்களுக்கு இக்கடன் தொகை வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடன்களை பெற்றவர்கள் உரிய காலத்தில் மீளச் செலுத்துவதன் மூலம் இக் கடன் திட்டத்தினை ஏனையவர்களுக்கும் வழங்க முடியும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(50-86)

# அகதிகளை இப்போது குடியமர்த்தினால் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும்

## சரத்பொன்சேகா வியாக்கியானம்

கண்டி, ஓக. 19

அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகளை, இப்போதைக்கு அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த இயலாது என கூட்டுப்படைகளின் தளபதியான ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் 17ஆம் திகதி கண்டிக்கு விஜயம் செய்து மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்த பொழுது அவர்கள் முன்னிலையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு அவர்களிடம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தினால் மீண்டும் பயங்கரவாத உறுப்பினர்கள் தலைதூக்க இடம் உண்டு. எனவேதான் இப்போதைக்கு அவர்களை சொந்த இடங்களில் குடியமர்த்த முடியாமல் இருக்கின்றது. இப்பொழுது முகாம்களில் இருக்கும் அகதிகளில் நாளொன்றுக்கு ஐந்து அல்லது ஆறு பேர் வரையிலான பயங்கரவாதிகள் கைதாகி வருகின்றனர். இதற்கு மத்தியில்தான் அரசுக்கு சேறு பூசும் நோக்கத்தோடு இவ்வாறு அகதிகளை விரைவில் குடியமர்த்துமாறு அரசை தொல்லைப்படுத்துகிறார்கள். இதன் யதார்த்தத்தை நாம் முதலில் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

வடக்கில் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் நிலக்கண்ணி வெடிகள் பரவலாக புதைக்கப்பட்டுள்ளன. இவற்றை அப்புறப்படுத்தும் வரை அங்கெல்லாம் மக்களை குடியமர்த்த இயலாது. 30 வருடமாக நாட்டை விழுங்கிக்கொண்டிருந்த பயங்கரவாதத்தை தீர்த்துக்கட்ட ஏதுவாக இருந்ததெல்லாம் அவை பற்றிய தெளிவான திட்டங்களே ஆகும்.

தொடர்ந்து அப்பிரதேசங்களில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. இந்த ஆயுதங்கள் எங்கிருந்து வந்தன? எவ்வளவு தொகை கொண்டு வரப்பட்டன என்பதான விவரங்களை இப்பொழுது கே.பி. நன்கு தெரிவித்து வருகிறார். இந்த நிலையில், கொழும்பில் இப்பொழுதும் புலிகள் கைதாகி வருகின்றனர். மக்கள் இன்று சுதந்திரமாகவும், அச்சமின்றியும் நடமாட முடிந்தாலும் நாம் பாதுகாப்பு வேலைத் திட்டங்களை ஒருபோதுமே குறைக்கமாட்டோம். - என்றார்.

(சி)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 04 | 20.08.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | அமாவாசை |
| | பி.ப. 04.26 வரை |
| நட்சத்திரம்: | ஆயிலியம் |
| | மு.ப. 11.04 வரை |
| சுபநேரம்: | 07.35 - 09.05 |
| ராகுகாலம்: | 01.35 - 03.05 |

அமாவாசை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராண்டு நினைவலைகள்



திருமதி
## இராசதுரை புஸ்பவதி

பிறப்பு: 03.03.1952 இறப்பு: 10.09.2007

திதி: 19.08.2009

அன்பின் புஷ்பமே!
எமக்கெல்லாம் வழிகாட்டிய அம்மா!
காலமெல்லாம் எம்மோடு
வாழ்வாய் என்றிருக்க
கண்ணீரைத் தந்து விட்டு
விண்ணுலகம் சென்றாயோ
ஆண்டுகள் இரண்டு ஆனது அம்மா
அழுது துடிக்கின்றோம்.

சாஸ்திரியார் லேன், அரியாலை. குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

அன்னை மடியில் 25.12.1930

இறை அடியில் 21.07.2009



அமரர்
## ஞானப்பிரகாசம் இம்மானுவேற்பிள்ளை

பாலகன் யேசு பிறந்த நாளினிலே
பாரினிலே அன்னைமரியா மடியினிலே
மூத்த முத்தாக முழுநிலவாய் உதித்தாயே- ஐயா
பெற்ற பிள்ளைகள் ஐவர் நாமும்
இன்னும் பல ஆண்டுகள் வாழ்வீர்கள் என
எண்ணியிருக்கும் வேளையிலே அமைதியை வாழ்வாகக் கொண்டு
ஆண்டவனடியிலே அமைதியாகத் தூங்கி விட்டீர்கள்- ஐயா!
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு
எம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

எமது குடும்பத் தலைவர் மறைந்த செய்திகேட்டு வருகை தந்து எமது துயரில் கலந்து ஆறுதலளித்தவர்களுக்கும் தொடர்புசாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் உரிய வேளையில் பலவழிகளிலும் உதவிசெய்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

31ஆம் நாள் நினைவு இரங்கல் வழிபாடு நாளை (20.08.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இவ்வழிபாட்டில் கலந்து அவருக்காக வேண்டுதல் செய்வதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். 25.08.2009 செவ்வாய் மாலை 5 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

குடும்பத்தினர், இ.திருச்செல்வநாயகி (மனைவி),
இ.பாபுஜி (மகன்), திருமதி முத்துராசா,
அ.றொகாசியன், ம.அன்ரனி தேவராசா (ஜெயா),
பி.லீனஸ் ஜெயா.

4ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

(87991)

# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

### FACULTY OF AGRICULTURE

Senior Professor/Professor in Agronomy/ Agricultural Biology/ Agricultural Chemistry/ Agricultural Economics.

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/Lecturer (Probationary) in Agronomy/ Agricultural Biology/Agricultural Chemistry/ * Animal Science

* Preference will be given to those who have B.V.Sc. degree for the appointment in the Department of Animal Science.

### FACULTY OF ARTS

Senior Professor/Professor in Education/Economics/ Fine Arts/Geography/Linguistics/Tamil/History

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/Lecturer (Probationary) in Education/ Hindu Civilization/ Law/ Teaching of English as Second Language/Philosophy/Political Science/Psychology/Archeology/Linguistics/Geography/Dance (Bharathanatiyam)/ Music (Vocal/Miruthangam/Violin/Veena/Pannisai).

Instructor Grade II in Music (Vocal/Miruthangam/Violin/Veena/Pannisai)/Dance (Bharathanatiyam)/Art & Design (Painting & Sculpture).

Note: Preference will be given those who have specialization and research publications in recognized National/International Journals in the fields of Human Geography for the appointment for the Post of Senior Lecturer Gr.I/II in the Department of Geography.

### FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

Senior Professor/Professor in Commerce

Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/Lecturer (Probationary) in **Management Studies.**

### FACULTY OF SCIENCE

Senior Professor/Professor in Mathematics/Statistics/Physics/Botany/Zoology/Marine Biology/ Computer Science/Chemistry (Physical/Organic)

Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/Lecturer (Probationary) in Mathematics/Statistics/Physics/Botany/Zoology/Chemistry.

Note: 1. Preference will be given to those who have B.Sc. (Eng.) degree with specialization in Electronics for the appointment in Department of Physics.

2. Preference will be given those who have specialization and research publications in recognized National/International Journals in the fields of Plant Pathology/Virology for the appointment for the Post of Senior Lecturer Gr.I&II in the Department of Botany.

**Computer Unit**

Instructor in Computer Technology Gr.II

| Post | Salary Scale |
|---|---|
| Senior Professor | Rs.57,755 - 11x900 - 67,655/- p.m. |
| Professor | Rs.50,905 - 13x850 - 61,955/- p.m. |
| Senior Lecturer Gr.I | Rs.42,650 - 7x800 - 48,250/- p.m. |
| Senior Lecturer Gr.II | Rs.37,650 - 11x700 - 45,350/- p.m. |
| Lecturer (Probationary) | Rs.26,900 - 10x585 - 32,750/- p.m. |
| Instructor in Computer Technology | Rs.25,145 - 3x585 - 26,900 (EB) 28655-13x585 - 36260 p.m. |
| Instructor Grade II | Rs.22,595 - 10x280 - 25,395/- p.m. |

Note: In addition to the above salary, the following allowance will also be paid.

i. An academic allowance equivalent to 25% of the basic salary (other than Instructors).
ii. Cost of living allowance Rs.4,500/- p.m.

**Statutory benefits:**

i. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
ii. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
iii. Gratuity payments.
iv. Employee's Trust Fund benefits.
v. Free Medical Services.

**Closing date:**

**Post of Senior Professor/Professor - 16.11.2009**
**Other posts - 30.09.2009**

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the Vice-Chancellor with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self- addressed stamped envelope of 23x10 c.m. in size. Further details could be obtained from the University Website www.jfn.ac.lk.

Those who wish to apply for more than one post should make separate application for each post.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illeligable, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

REGISTRAR,
UNIVERSITY OF JAFFNA,
SRILANKA.
14.08.2009

(C/560350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2009 சைவப் புலவர் தேர்வில் சித்திபெற்றோர் விவரம்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் 2009 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

சைவப் புலவர் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரங்கள் வருமாறு:-

தங்கராசா சக்திவேல் (பருத்தித்துறை), சின்னராசா ரமணராசா (அளவெட்டி), செல்வி வினோ தம்பையா (சாவகச்சேரி).

இளஞ்சைவப் புலவர் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:-

திருமதி சிவானந்தஜோதி ஞானசூரியர் (மட்டக்களப்பு), கோகுலராஜா சசிபாலன் (சாவகச்சேரி), செல்லத்தம்பி விஜயகுமார் (கரவெட்டி), திருமதி ஜெயலட்சுமி சந்தோஷம் (கொழும்பு), செல்வி சவுந்தரி இராசேந்திரம் (நானாட்டான்). (-9)

## மரக்கறிகளைத் திருடிச் சென்றவர் விழிப்புக் குழுவிடம் மாட்டிக் கொண்டார்

வலி.வடக்கு,ஓக.19

இரவு வேளையில் தோட்டத்தில் மரக்கறிகளைத் திருடிக் கொண்டு வந்தார் என்று கூறப்படும் ஒருவர் விழிப்புக் குழுவிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

உரும்பிராய் அன்னங்கைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரவுக் கடமையில் ஈடுபட்டிருந்த விழிப்புக் குழுவினரால் குறிப்பிட்ட நபர் பிடிக்கப்பட்டு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று கூறப்பட்டது.

ஊரடங்கு வேளையில் மூவர் ஜகையில் பொருள்களுடன் நடந்து வருவதைக் கண்ட விழிப்புக் குழுவினர் சந்தேகம் கொண்டு இவர்களை மறித்து விசாரணை செய்துள்ளனர்.

இந்தச் சமயம் அவர்கள் கொண்டு வந்த மூடைகளைப் போட்டுவிட்டு இருவர் ஓடிவிட்டனர். ஒருவர் விழிப்புக் குழுவினரிடம் மாட்டிக் கொண்டார்.

அவரிடமிருந்து ஒரு தொகுதி மரக்கறி வகைகளையும் பறிமுதல் செய்ததுடன் அவரை இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளார்கள் என்றும் கூறப்பட்டது.

கடந்த பல நாள்களாக இரவு வேளைகளில் இப்பகுதியில் உள்ள மரக்கறித் தோட்டங்களில் மரக்கறிகள் திருட்டுப் போகும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-86)

## சந்நிதி ஆலயத்தில் ஆன்மீக நிகழ்வுகள்

வடமராட்சி, ஓக.19

தொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை ஒட்டி கோவில் சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு சாயி பஜனையும், நாளை மறுதினம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, வாராந்த நிகழ்வின் தொடரான ''தேவி பாகவதம்'' என்னும் தலைப்பிலான தொடர் சொற்பொழிவும் இடம்பெறும்.

இச்சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு ''உன்னையே நீ அறிவாய்'' என்னும் தலைப்பில் ஆசிரியர் க. முருகமூர்த்தியின் சொற்பொழிவு இடம் பெறும்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையால் திருவிழாக் காலங்களில் அன்னதானப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

(203- 236)

# பல்வேறு இடங்களிலும் அதிகரித்துள்ள திருட்டுச் சம்பவங்களால் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஓக.19

குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் மக்கள் பெரும் விசனத்துக்கு ஆளாகியுள்ளனர்.

வீதிகளில் பயணம் செய்பவர்களிடம் சங்கிலி போன்ற தங்க நகைகள் அபகரிக்கப்படுவதாலும் வீதிகளில் பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் இடம்பெற்ற இவ்வாறான சம்பவங்கள் சில வருமாறு:-

ஆலயத்துக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண் ஒருவரின் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களினால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

உடுவில் லவ்லேனில் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட பெண்ணைத் தொடர்ந்து வந்ததாகக் கூறப்படும் இருவர் ஆள்கள் இல்லாத இடத்தில் வைத்து திடீரென தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு ஓடியதாகக் கூறப்பட்டது. அந்தப் பெண் கூச்சலிட்டதையடுத்து அயலவர்கள் வந்தபோதும் திருடர்கள் தோட்ட வெளியூடாகத் தப்பிச் சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருட்டுத் தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (203-86)

* * *

கொழும்புத்துறை ஈச்சமோட்டை வீதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த சனிக்கிழமை கொள்ளையிடச் சென்ற திருடர் கோஷ்டி அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களால் விரட்டியடிக்கப்பட்டனர்.

இவர்களைப் பிடிக்க முயன்றபோதும் அது கைகூடவில்லை என்று அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

இதே வீட்டில் கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவும் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அன்றைய தினம் பெறுமதி வாய்ந்த கதவுகள் உட்பட தையல் இயந்திரம், மின்சாரப் பொருள்கள், தளபாடங்கள் உட்பட சுமார் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

திருட்டு நடந்த சமயம் வீட்டில் எவரும் இருக்கவில்லை எனவும் கூறப்பட்டது. இந்தப் பகுதியில் அடிக்கடி திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (203-111)

* * *

நவாலியில் பட்டப் பகலில் வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி அப்பகுதியால் சைக்கிளில் வந்தவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தேவரத்தினம் புஸ்பராணி என்பவரது சங்கிலியே அபகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது (203-100)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.19

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசாரஅலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ''ரதோற்சவ தத்துவம்'' என்னும் தலைப்பில் ஆசிரியர் கு.சுமுகலிங்கம், சைவ சித்தாந்த பண்டிதர் கந்தசத்தியதாசன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவு வழங்கவுள்ளனர்.

அளவெட்டி விநாயகர் அறநெறிப் பாடசாலை, நீலியம்பனை அறநெறிப் பாடசாலை, சங்கரத்தை முருகமூர்த்தி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

* * *

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் இசையரங்கு நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. பாட்டு- பொன் ஸ்ரீவாமதேவன், வயலின்- கே. குகபரன், மிருதங்கம்- எஸ். துரைராசா, கெஞ்சிரா- வி.சிவமூர்த்தி, முகர்சிங்- எஸ். செந்தூரன், கடம்-ஏ. செல்வரத்தினம்.

* * *

நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் ''கானகதா வாரிதி'' பிரம் மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா ''கம்பராமாயணம்'' என்னும் தலைப்பில் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தி வருகிறார். இன்று புதன்கிழமை 'இன்றுபோய் நாளைவா' என்னும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு இடம்பெறும் (201)

## வியாபாரிகளால் வீசப்படும் கழிவுகளால் பொதுமக்களின் போக்குவரத்து பாதிப்பு

வண்ணை,ஓக.19

யாழ்.நகரின் மையப் பகுதிகளில் வியாபாரிகளின் கழிவுப் பொருள்கள் வீதிகளில் நிறைந்து கிடந்து போக்குவரவுக்கு பெரும் அசௌரியங்களை விளைவிப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் மத்திய பேருந்து நிலையம் முன்பாகவுள்ள பகுதிகள் காங்கேசன்துறை வீதியில் சத்திரத்து சந்தியில் இருந்து முட்டாய்க் கடைச் சந்திக்குட்பட்ட பகுதிகளில் தினமும் மாலை நேரங்களில் கடை வியாபாரிகள் மற்றும் தெருவோர விற்பனையாளர்களால் போடப்படுகின்ற பொலித் தீன், சொப்பிங், காட்போட் கழிவுப் பொருள்களால் வீதிகள் நிறைந்து காணப்படுகின்றன.

இதனால் வீதிகளில் பயணிக்கும் துவிச்சக்கர வண்டி சில்லுகளில் சொப்பிங் பாக் மற்றும் பொலித்தீன் பைகள் சிக்கிப் போக்குவ்ரவுகளில் மிகுந்த அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன.

சம்பந்தப்பட்ட கடைக்காரர்கள் வியாபாரிகள் தம்மால் கழிக்கப்படுகின்ற மேற்படி பொருள்களை பொதிசெய்து ஓரிடத்தில் சேமித்து குப்பை எடுக்கும் வாகனங்களில் ஒப்படைக்கலாம். அவ்விதம் நடவாமல் மீறுவோர்மீது யாழ்.மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (1-160)

## இந்துசாதனம் வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ்.சைவபரிபாலன சபையின் ஆவணி மாதத்துக்கான "இந்து சாதனம்" இதழ் வெளிவந்துள்ளது.

நல்லைக் கந்தன் ஆலயத்தின் சிறப்புக் கட்டுரையுடன் தேர்ப்படத்தை முகப்புப் பக்கத்தில் தாங்கியவாறு வழமையான ஆன்மீகக் கட்டுரைகள், கவிதைகள் எனப் பல்வேறு சைவசமயம்சார் விடயங்களைத் தாங்கி 'இந்து சாதனம்' வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(-9)

## இரத்ததான நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.19

தென்மராட்சிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் குருதிக் கொடை வழங் கினர்.


பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குருதிக் கொடை நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் (நிதி) உட்பட 22 உத்தியோகத்தர்கள் இரத்ததானம் செய்தனர்.

பிரதேச செயலக மண்ட பத்தில் கடந்த 12 ஆம் திகதி யாழ்.போதனா வைத்திய சாலை குருதி வங்கிப் பிரிவினரால் குருதி பெறப் பட்டதாகத் தெரிவிக்க ப்பட்டது. (203-207)



நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவினை முன்னிட்டு ஆலயச் சூழலில் ''ஜசாக்'' நிறுவனத்தால் ''காலநிலை மாற்றத்தினை கருத்தில் எடுப்போம்'' எனும் தொனிப் பொருளில் விசேட விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்று வருகிறது.

ஜசாக் நிறுவன உத்தியோகத்தர் காலநிலை மாற்றத்திற்கான காரணங்களை விளக்கமளிப்பதைப் படத்தில் காணலாம்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில்
இன்று தேர்த்திருவிழா
முருகனே! நல்லைக் கந்தனே சரணம்!
விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:
VESTA INDUSTRIES
Kulappitty Road, Anaicoddai, Jaffna.

நல்லூர் தேர்த் திருவிழாச் சிறப்புதின வாழ்த்துக்கள்
டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்
சகல விதமான மோட்டார் சைக்கிள்
வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள்
அனைத்தும் சிறந்த முறையில் உத்தர
வாதத்துடன் மீள் திருத்திக் கொடுக்கப்படும்.
★மற்றும் உற்பத்திகளும் செய்யப்படும்.
கே.கே.எஸ்.றோட், இல.06, கனகசபை லேன்,
வண்ணார்பண்ணை, சிவலிங்கப்புளியடி..
தொ.பே: 021 222 8680 (சி/559800)

கையடக்கத் தொலைபேசிகள், உதிரிப்பாகங்கள், KIT காட்,More காட், Sim காட் என்பவற்றைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதுடன், டயலொக், மொபிரெல் றீலோட் வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
★Hand Phone Unlock செய்து தரப்படும். அத்துடன் சிறந்த முறையில் மேசைத்தொலைபேசிகள், கையடக்கத்தொலைபேசிகள் பழுதும் பார்க்கப்படும்.
★குறைந்த கட்டணத் தில் தொலைபேசி அழைப்புக்களை பெற்றுக் கொள்ளலாம். ''இன்றே விரையுங்கள்''
ஸ்ரார் செலுலர்
இல-16, பஸ் நிலையம்,
(இ.போ.ச. பஸ் தரிப்பிடம் முன்பாக) யாழ்ப்பாணம்.
T.P. 021 222 8701 (சி/559799)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்ததின வாழ்த்து




நீராவியடி, சிவகுருநாதர் வீதியைச் சேர்ந்த இரகுலேசன் - நளாயினி தம்பதியரின் செல்வப் புதல்வி நயனா தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (19.08.2009) புதன்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, அன்பு அக்கா நர்த்தனா, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணாமார், மச்சாள்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், சித்தப்பாமார், சாவகச்சேரியில் உள்ள பூட்டி, கொழும்பிலுள்ள கொப்பாட்டி, மற்றும் உற்றார், உறவினர், அயலவர்கள் அனைவரும் பிள்ளையாரின் அருளினாலும் பகவான் ஸ்ரீ சத்யசாயியின் ஆசீர்வாதத்துடனும் சகல கலைகளும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

இ.பரமானந்தம்,
18A,சிவகுருநாதர் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
தாத்தா.

(87949)

## கௌரவிப்பு நிகழ்வு

நல்லூர் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் மேற்கு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் 25 தினங்களும் 'கம்பராமாயணம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவினை நிகழ்த்திய 'கானகதாவாரிதி' பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா இன்று புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படவுள்ளார்.

நல்லூர் சைவ மகாசபையின் தலைவர் து.இராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (9)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணைப் புங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



## கூரியர் சேவை

அவசர தேவையின் நிமித்தம் பொதிகள் மற்றும் ஆவணங்களை 48 மணி நேரத்தில் அனுப்பும் வசதி



லண்டன், பிரான்ஸ், கனடா, சுவிஸ் நாடுகளுக்கான 1 Kg கட்டணம் 550/=
அவுஸ்திரேலியா, 1 Kg கட்டணம் 700/=

### விசேட தேவை

லண்டன், சுவிஸ் நாடுகளிலிருந்து மிக விரைவாக இலத்திரனியல் பொருட்கள் பொதிகள் மற்றும் ஆவணங்களை மிக குறைந்த கட்டணத்தில் பெற்றுகொள்ளலாம்.

ARRUL GLOBAL EXPRESS
T.P: 021 222 6113


## 50 வருட திருமண நிறைவு வாழ்த்து



### திரு.திருமதி சேவியர் பத்திநாதர்

இன்று (19.08.2009) தமது திருமண வாழ்வின் 50 வருடங்களை நிறைவு செய்யும் திரு.திருமதி சேவியர் பத்திநாதர் தம்பதியினரை மேலும் பல இறையாசீர்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

தகவல்:
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,

(சி/560358)


HOME VISITING MEDICAL SERVICE

Scan ,ECG, மருந்து வகைகள், இரத்த, சல பரிசோதனை வசதிகளுடன் வீடுகளிற்கு வந்து வைத்திய சேவை மேற்கொள்ளப்படும்.
யாழ்.மாநகர எல்லைக்குள் பி.ப.4 மணி முதல் 8 மணி வரை.
தொடர்பிற்கு: 0718562089, 0779363247.
காருண்யா வைத்திய நிலையம்
4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (87937)


## கண்ணீர் அஞ்சலி



யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி ஆசிரியரான த.ஜெல்பி றிகன் அவர்களின் பாசமிகு தந்தை

### அமரர் மடுத்தீன் தமியான்

17.08.2009 அன்று இறைபதம் எய்தியுள்ளார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'மீனா வாசம்',
12ஆம் வட்டாரம், நெடுந்தீவு.
நண்பர்கள்.
(87998)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சத்தியநாதன் (சத்தியம்)



பிரம்படி கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சத்தியநாதன் 17.08.2009 திங்கட்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகரத்தினம் தம்பதியரின் இளைய புதல்வனும் காலஞ் சென்றவர்களான சோமநாதன் - இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் தயாவதியின் அன்புக் கணவரும் ஷோபி, ஸ்ரீபஃன், ஜெனிபன் ஆகி யோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்ற மங்கையர்க்கரசி மற்றும் பரமேஸ்வரி (கனடா), ராஜேஸ்வரி, சண்முகநாதன் (கனடா), சர்வேஸ்வரி, சற்குணநாதன் (லண்டன்) ஆகி யோரின் அன்புச் சகோதரனும் தி[illegible]வதி, ரவீந்திரன், காலஞ்சென்ற தினகரன், ரூபாவதி, கருணாவதி, கலாவதி, நந்தாவதி (ஜேர்மனி), சுவேந்திரன் (ஸ்ரீ) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுவீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
தி.ராஜேஸ்வரி,
பு.சர்வேஸ்வரி (சகோதரி).
(87985)


IDM COMPUTER STUDIES (PVT) LTD.
AFFILIATED UNIVERSITY COLLEGE
JAFFNA
Nation's ICT Academy Affiliated University College

22,23,24 Aug 2009 ம் திகதிகளில் நடைபெற இருந்த DIP in ICT பரீட்சைகள் 29,30,31 Aug 2009 ஆகிய திகதிகளுக்கு பிற்போடப்பட்டுள்ளது.

-Management-

216, Navalar Road, Jaffna. Tel: 021 2229901 / 021 7451785


## கண்ணீர் அஞ்சலி

மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தில் சமுர்த்தி முகாமையாளராக (கணக்காய்வு) கடமை புரியும் திரு.எஸ்.அமலதாஸ் அவர்களின் பாசமிகு தந்தை

### பேதுருப்பிள்ளை சொஸ்ரியாம்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்தி உதவி ஆணையாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும்.

மாவட்டச் சமுர்த்தி அலுவலகம்
மாவட்டச் செயலகம்,யாழ்ப்பாணம் (87999)

## 50ஆவது ஆண்டு திருமண நிறைவு வாழ்த்து



### திரு.திருமதி சங்கரப்பிள்ளை - அபிராமிப்பிள்ளை தம்பதிகள்

பல் வளமும்
பல நிறைவும் பெற்று
நோயற்ற வாழ்வும்
தேகாரோக்கியமும் சிறந்து
நீண்ட ஆயுளுடன்
நிறைவாக வாழ
இறையாசி வேண்டி - மனம்
நிறைந்து வாழ்த்துகின்றோம்.

72,- செட்டித்தெரு,
நல்லூர்.
நி.மு.: நெடுந்தீவு - 4.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(57992)


## நடிகர், நடிகைகள் தேவை

உலகத் தொலைக்காட்சிகளில் முதல் முறையாக தமிழ், சிங்கள கலாசாரங்களை மையமாக வைத்து தமிழ் - சிங்கள, தென்னிந்திய நடிகர்கள் ஒன்றிணைந்து உள்நாட்டிலும் - வெளிநாட்டிலும் (கனடா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட) திரைப்படத்தில் நடிப்பதற்கு நடிகர், நடிகையர் தேவை.

நேர்முகப் பரீட்சை :
வீடியோ கலாநிதி, அச்சுவேலி
கலை அரங்கில்: 26.08.2009
புதன்கிழமை மு.ப: 9மணி

1960 - 2000 வரையான நான்கு தசாப்த காலப்பகுதியில் தமிழ் கலாசாரம், தமிழ் மக்களின் வாழ்க்கை முறை என்பனவற்றை வெளிப்படுத்துவதற்கு உங்களிடம் உள்ள அந்தக் காலப்பகுதியில் பாவனையில் இருந்த பொருள்களை அன்புடன் கேட்கின்றோம்.

பழைய ரிக்ஷா (கை) வண்டி, செய்திப் பத்திரிகைகள் (வீரகேசரி, ஈழகேசரி, ஈழநாடு உட்பட) தட்டிவான், சவுலற்வான், பெட்போரிட் லொறி, ஏ-40 கார், ஒக்ஸ் போர்ட் கார், சோமசெற்கார், மொறிஸ்மைனர் கார், கிராம்போன், றேடியோ, பழையகாலப் புகைப்படங்கள், மைப்பேனா, ஆட்டோ, ஏர்க் கலப்பை, மாட்டுவண்டில், மூக்குப் பேணி (பித்தளை), வெற்றிலைத்தட்டு, உரல், மாவாட்டும் கல், மோட்டார் சைக்கிள், உழவுயந்திரம், குதிரை வண்டில் உள்ளிட்ட பாவனைப் பொருள்கள்.

எங்கள் கலைப்பணி சிறக்க தந்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வீடியோ கலாநிதி,
அச்சுவேலி. (சி/560363)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21 | 20 |
| 03 | 07 |
| 1943 | 2009 |



### அமரர் சின்னத்துரை பாலசுந்தரம்

கடந்த 20.07.2009 திங்கட்கிழமை எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவின் போது எம் துயரத்தில் பங்கெடுத்த சகலருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (19.08.2009) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

பெரியரசடி,
ஆசிரியர் வீதி, சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், தம்பையா குடும்பத்தினர்.

(சி/560385)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் போரினால் இறந்தபோது வேடிக்கை பார்த்த சர்வதேசம் வவுனியா வெள்ள அனர்த்தத்தையும் அவ்வாறே செய்யப்போகிறதா?

## நாடாளுமன்றில் சுரேஷ் எம்.பி. காட்டம்



கொழும்பு, ஒக.19

''வன்னி முள்ளி வாய்க்காலில் யுத்தத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தபோது வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த சர்வதேச நாடுகளும் ஐ.நா.சபையும், இன்னும் ஒருசில தினங்களில் மழையினால் வவுனியா அகதிமுகாம்களில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கப் போகின்றமையும் பார்த்துக்கொண்டு நிற்கப்போகின்றதா?''

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று நாடாளுமன்றில் சர்வதேசத்திடம் கேள்வி எழுப்பியது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்திடம் அரசு பெற்ற கடன் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டமைப்பு எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த அகதிகள் மழை காரணமாக மீண்டும் ஒரு பாரிய மரணத்தை எதிர்கொண்டுள்ளனர். 4 நாள்கள் பெய்த மழையால் அகதிமுகாம்களுக்குள் நீர் நிரம்பி வழிகின்றது.

நீர் தேங்கி நிற்பதால் மக்களால் உட்கார முடியாது, படுக்க முடியாது, சமைக்க முடியாது. இதுபோக மலசலகூடக் கழிவுகள் வெளியேறத் தொடங்கிவிட்டன. எங்கும் துர்நாற்றம் வீசுகிறது.

இந்த நிலைமை தொடர்பாக மாவை சேனாதிராஜா, பஸில் ராஜபக்ஷவிடம் கூறியபோது அவர் ஐ.நா. சபையைக் குற்றம் சாட்டினார். ஐ.நா.சபைதான் நீர் வழிந்தோட வடிகால்கள் வெட்டவில்லை என்று கூறினார்.

ஆனால், நாம் அரசுக்கு உதவி செய்தோம். வடிகால்களை இலங்கை அரசுதான் வெட்ட வேண்டும் என்று ஐ.நா. அதிகாரிகள் கூறுகின்றனர்.

**சதுப்பு நிலத்தில் முகாம் அமைக்க வேண்டாம் என்று முன்னரே கூறப்பட்டது**

ஆனால், அந்த இடத்தில் அகதி முகாம்களை அமைக்கவேண்டாம். அது சதுப்பு நிலம். மழை பெய்தால் அங்கு நீர் தேங்கி நிற்கும் என்று சிலர் அரசிடம் முன்பே கூறினர். ஆனால், அரசு அதைப் பொருட்படுத்தாது அந்த இடத்தைத் தெரிவுசெய்து அகதி முகாம்களை அமைத்தது.

அந்த முடிவு மீண்டும் அந்த மக்களின் உயிரைப் பறிக்கும் செயற்பாடாக அமைந்துள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் மீண்டும் உயிரிழக்கப் போகின் றனர்.

கண்ணிவெடிகளை அகற்றிமுடிக்காமல் அகதிகளை மீள்குடியமர்த்த முடியாது என்று பிரதமர் கூறுகின்றார். ஆனால், கண்ணிவெடிகளை அகற்ற சிறிய எண்ணிக்கையிலானோரே நியமிக் கப்பட்டிருக்கின்றனர்.

இரண்டரை லட்சம் படையினரால் 50 ஆயிரம் பேருக்கு பயிற்சியளித்து அவர்களைக் கண்ணிவெடிகள் அகற்ற நியமிக்கலாம். அப்படிச் செய்யாது ஒரு சிலர் மாத்திரமே கண்ணிவெடிகள் அகற்ற நியமிக்கப்பட்டுள்ளனர். அப்படியாயின், இம்மக்களை மீளக் குடியமர்த்தப் பல வருடங்கள் செல்லும்.

அதற்குள் இந்த மழையால் மக்கள் மரணித்துவிடுவார்கள்.

கண்ணிவெடிகளைக் காரணங்காட்டி அந்த மக்களை மீள்குடியமர்த்த முடியாது போனாலும், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் உள்ளிட்ட பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளில் பருவப்பெயர்ச்சி மழைக்கு முன்பாக அந்த மக்களைத் தங்கவைக்க வேண்டும்.

எமது மக்களைத் துன்பம் அனுபவிக்க வைத்துவிட்டு அவர்கள் எமது நாட்டு மக்கள் என்று கூறுகிறதே இந்த அரசு. வெட்கமில்லையா?

பிச்சை எடுக்காது தௌரவமாக வாழ்ந்த எமது மக்களை பிச்சைக்காரர்களை விடவும் கேவலமாக மாற்றிவிட்டது இந்த அரசு. அவ்வாறு செய்து இந்த மக்களைக் காட்டி அரசு வெளிநாடுகளிடம் பிச்சை எடுக்கின்றது. அந்தப் பணம் கூட அந்த மக்களைச் சென்றடையவில்லை. - என்றார். (அ-சி)

# கண்ணிவெடிகள் இருக்கும் இடங்களைத் தடைசெய்து ஏனைய பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்தலாம்

## இந்து அமைப்புக்களின் ஒன்றியம் அரசுக்கு எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், ஒக.19

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து அரசின் வேண்டுதலை செவிமடுத்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு உள்ளக இடம்பெயர்ந்தவர்கள் சுயமாக கண்ணிவெடிக்குள் அகப்படாமல் வந்துசேர்ந்தனர்.

அதேபோல பாதுகாப்புப் படையினரும் புலிகளின் பிரதேசத்தை மீளக்கைப் பற்றியபோது கண்ணிவெடிக்குள் சிக்கவில்லை.

எனவே கண்ணிவெடி புதைக்கப்பட்டிருக்கும் இடங்களை உடன் இனங்கண்டு அவ்விடங்களை தடைசெய்து ஏனைய பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர துரித முன்னேற் பாடுகள் செய்யலாம்.

இந்து அமைப்புக்களின்ஒன்றியம் மேற்கண்டவாறு அரசாங்கத்திடம் கேட்டுள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான பஸில் ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே ஒன்றியம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

வன்னி, யாழ்ப்பாணம், நலன்புரி நிலையங்களில் வாழும் உள்ளக இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களுக்கு கட்டம் கட்டமாக மீள்குடியமர்வதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் முன்னேற்றகரமான நடவடிக்கை மகிழ்ச்சிக்குரியது.

அதேசமயம் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகவிருக்கும் மழைகாலத்திற்கு முன்னர் யதார்த்த பூர்வமாக எதிர்நோக்கும் முட்டுக்கட்டைகளை அகற்றி ஏனையவர்களையும் அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்த முயற்சிக்க வேண்டும்.

தற்போது இரண்டு லட்சத்து எண்பதினாயிரம் உள்ளக இடம்பெயர்ந்தவர்கள் எவ்வித அடிப்படை வசதிகளற்று, மன அழுத்தத்தோடு திறந்த வெளிச்சிறைச்சாலை என வர்ணிக்கக்கூடிய இடத்திலேயே வாழ்கின்றார்கள்.

எனவே நாம் சகலயுக்திகளையும் கையாண்டு, தன்னம்பிக்கையும் பொறுப்பையும் கட்டிவளர்த்து ஐக்கிய நாடுகள் உள்ளக மீள்குடி ய மர்தல் வழிகாட்ட லிற்கமைய பரிகாரம் கொடுக்கவேண்டும். - என்றுள் ளது. (1)

## வவுனியா அகதி முகாம் மக்களின் அவலம்; நாடாளுமன்றில் இன்று விவாதம்

வவுனியாவில் உள்ள நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள தமிழ் மக்கள், தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையினால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் இன்று புதன்கிழமை பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து விவாதிக்க உள்ளது.

இதற்கான பிரேரணை முன்னறிவித்தலை கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுப் பிரதித் தலைவர் மாவை சேனாதிராஜா நேற்று சபாநாயகர் ஜே.எம்.லொக்கு பண்டாரவிடம் சமர்ப்பித்தார்.

சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 20 ஆயிரம் பேர் வரையான மக்கள் வெள்ளம் புகுந்துள்ள கூடாரங்களில் இருந்து வெளியே வரமுடியாமல் தவிக்கின்றனர் என்றும் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு நிவாரணப் பணியாளர்களை இன்னமும் அங்கு அனுப்பிவைக்கவில்லை என்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களை உடனடியாக அங்கு அனுப்பி வைக்கவேண்டும் எனவும் அந்தப் பிரேரணையில் தெரிவீக்கப்பட்டுள்ளது.

இந்த விவாதத்தில் அரச தரப்பு, எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-சி)

## சங்கானை இளைஞர் கொழும்பில் கைது

யாழ்ப்பாணம், ஒக.19

வெளிநாடு செல்வதற்காக கொழும்பு சென்றிருந்த சங்கானை இளைஞன் கொழும்பில் வைத்து புலனாய்வுப் பொலி ஸாரல் கைது செய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டுள்ளார் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சங்கானை, ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த கணேசலிங்கம் கஜிந்தன் (வயது24) என்பவர் தொடர்பாக அவரது தாயார் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

கடந்த மே மாதம் 2 ஆம் திகதி கொட்டாஞ்சேனையில் உள்ள சேனியா விடுதியில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார் என்றும் இவரை விடுவிக்க உதவுமாறும் அவர் முறைப்பாட்டில் கேட்டுள்ளார். (1-25)

## மரக்கறி உற்பத்தியாளர்களுக்கு சைக்கிள் வழங்கும் நிகழ்வு இன்று

வடக்கின் வசந்தம் - 180 நாள் துரித அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப் பட்டுள்ள மரக்கறி உற்பத்தியாளர்கள் 10 பேருக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு திரு நெல்வேலி விவசாய விரிவாக்க நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் மாம்பழத்தை பாதுகாப்பாக சந்தைக்கு கொண்டு செல்வதற்கான பிளாஸ்டிக் பெட்டிகள் மாம்பழ உற்பத்தி யாளர்கள் 120 பேருக்கு வழங்கும் நிகழ்வு இன்று இடம்பெறும். யாழ். விவசாய விரிவாக்க பிரதிப் பணிப்பாளர் சி. சிவகுமாரன் தலைமை யில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக [illegible] வைத்தியத்திணைக்கள பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொள்வர். (1)


## கிறிஸ்த சேவ ஆச்சிரம அறிவித்தல்

2009 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை அன்று நடைபெற இருந்த 70 ஆவது ஆண்டு விழா "பரிசுத்த நிகழ்வுகள்" யாவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

ஆச்சிரம பரிபாலன சபை,
மருதனார்மடம்,
சுன்னாகம்.



## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

களஞ்சியப்பொறுப்பாளர் தேவை (ஆண்கள் மட்டும்)

கல்வித்தகைமை : க.பொ.த (சா/தரம்) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அனுபவம்: குறிப்பிடப்பட்ட பதவியில் ஆகக்குறைந்தது 3 வருட முன்னனுபவம் இருத்தல் வேண்டும்.

வயது: இன்றைய திகதியில் 40 வயதிற்கு குறையாமலும்65 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

சம்பளம்: பேசித்தீர்மானிக்கப்படும்.

இத்தகைமைகளுடன் மக்களின் நன்மதிப்பை பெற்ற இருவரின் சிபார்சுக் கடிதத்துடன் 21.08.2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது சங்க காரியாலயத்திற்கு சமுகம் தரவும்.

(சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்)

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்.


## மரண அறிவித்தல்கள்

### அ.சி.ஜீவரட்ணம் (சாம்)

*(க.அ.சின்னையா அன் சன்ஸ்)*



நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிரட் சின்னையா ஜீவரட்ணம் 13.08.2009 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான க.அ. சின்னையா - பாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் அருளானந்தம் - திரேசா தம்பதியரின் அன்பு மருமகனும் பிறேமலதாவின் (பிறேமா) அன்புக் கணவரும் குமுதினி, கெனத் ஜீவகுமார், சியாளினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெபரட்ணம் (டேவிற்), புளோறன்ஸ் இராஜசிங்கம், ஜேக்கப் ஜெயரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற சதீஸ் மற்றும் றமேஸ் கர்ணா ஆகியோரின் மாமனும் டெபோனின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.08.2009) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் கொத்துக்கட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*541, நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.* (87015)

தகவல்: அ.சி.ஜெபரட்ணம்
*(டேவிற் - சகோதரன்),*

### இளையதம்பி இராசையா



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வதிவிடமாகவும் தற்போது கொக்குவிலில் வசித்தவருமான இளையதம்பி இராசையா நேற்று (18.08.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகனும், பங்கஜவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பார்வதி, செல்லத்துரை மற்றும் இராசலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீபத்மினி, ஸ்ரீரஞ்சனி(பி.உ.உ. ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), Dr.அருந்ததி(மாநகரசபை,யாழ்ப்பாணம்), )ஸ்ரீதரி, நந்தினி(யா/நாவற்குழி ம.வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயச்சந்திரன், Dr.சிவசுப்பிரமணியம் (பிரதேசசபை, நல்லூர்), அருட்செல்வன், மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும். ரமணன்,லதன்,நிலானி, சிவநீபன், சிவாம்சன், கேசிகா, சாம்பவி, பிரவீனா, சபீசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2009) புதன் கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


சஞ்சீவி வைத்திய நிலையம்,
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல் :
மருமகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்







நல்லூர் கந்தசுவாமி கோயிலில் சப்பறத் திருவிழாவில் சுமார் 20 ஆயிரம் பக்தர்கள் நேற்று மாலை திரண்டனர் என மதிப்பிடப்பட்டது. பலப்பல வருடங்களின் பின்னர், ஊரடங்கு தளர்த்தப்பட்ட சூழலிலும், குடாநாட்டின் நான்கு திக்குகளிலும் இருந்து திரண்ட பக்தர் வெள்ளத்தில் சப்பறத்தில் மிதந்து வலம் வந்து அள்ளி அருள் வழங்கினான் அலங்காரக் கந்தன்.

*(படங்கள்: லக்ஸ்மன், நேசன்)*

## நல்லைப்பதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, பக்தர்களின் வசதி கருதி குடாநாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் விசேட பஸ் சேவை களை போக்குவரத்து சபையும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களும் ஏற்பாடு செய்துள்ளன.

(அ-1)

## அகதிமுகாம்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லத்தை, அவர்கள் இந்த நாட்டின் பிரசைகள் எனக்கருதி ஜனாதிபதி ஒரு தடவையேனும் நேரில் வந்து பார்க்க வேண்டும். அவர்களின் சோகத்தை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

சொந்த இடத்தில் என்ன கஷ்டம் அனுபவித்தாலும் பரவாயில்லை தங்களை மீளக்குடியமர்த்த வேண்டும் என்ற கோரிக்கையே சகலராலும் முன்வைக்கப்பட் டது.

போரின் போது பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேர்வதுதான் அங்கு ஒரு சந்தோஷமான செய்தி. ஏனைய எல்லோரும் சோகமாகவே இருக்கின்றனர் - என்றார் அவர்.

அந்த முகாம்களில் இருக்கும் மக்கள் தமது அவலங்களை அவரிடம் எடுத்துக் கூறினர்.

உங்களுக்காக என்னால் கண்ணீர் மட்டும்தான் வடிக்கமுடியும் என ஆனந்த சங்கரி அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

முகாமில் கண்டவற்றையும் கேட்டவற்றையும் தொகுத்து மக்களின் அவலங்களை பிரதிபலிக்கக் கூடிய அறிக்கையை ஜனாதிபதிக்கும் சர்வதேசத்துக்கும் குறிப்பாக இந்தியாவுக்கும் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்- என்றும் ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

(அ-1)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை வவுனியாவில் இன்று நடைபெறும் நிகழ்வு ஒன்றுக்கு வருகை தரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவும் அந்த இடங்களுக்கு சென்று சேதங்களைப் பார்வையிட விருக்கிறார் என்று நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவித்தன.

(அ-1)

## தமிழர்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இதன் காரணமாக விடுதலைப் புலிகள் மீண்டும் செயற்படத் தொடங்குவதற்கான வாய்ப்புகளும் ஏற்படுத்தப் படுகின்றன.

அரசு இலங்கையில் உள்ள தமிழர்களுடன் மாத்திரமின்றி வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களுடனும் பேச்சுகளை மேற்கொள்வது மிகமிக முக்கியமானது.

தேசிய நல்லிணக்கத்தைத் துரிதப் படுத்துவதாயின் அரசு இதனை மேற் கொள்ளவேண்டும்.

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களை அரசு துரிதமாக மீளக் குடியேற்றவேண்டும்.

இடம்பெயர்ந்தவர்களின் நிலைமைக்கும் இலங்கைக்கான வாஷிங்ரனின் நிதியுதவிக்கும் நேரடித் தொடர்புள்ளது.

இடம்பெயர்ந்தவர்களை கூடிய விரைவில் மீளக்குடியமர்த்துவது என்ற தனது உறுதிமொழியை நிறைவேற்றுவதில் இலங்கை காட்டும் முன்னேற்றத்தைப் பொறுத்தே மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் வாழ்வாதாரத்துக்கான அமெரிக்காவின் உதவி அமையும் -என்றார் பிளேக்.

(அ-சி)

## வெள்ளத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் அமைச்சர் டி.யு.குணசேகர முன்வைத்த கோரிக்கைக்குப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவே மேற் கண்டவற்றைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் இப்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் வவுனியா அகதிகள் மீது நாம் கவனம் செலுத்துகிறோம். இந்த மக்கள் எதிர்கொள்ளப் போகும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முகம்கொடுக்கத் தயாராகுமாறு நாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் முப்படையினருக்கும் உத்தரவிட்டுள்ளோம்.

பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையின்போது மூன்று லட்சம் மக்கள் எம்மிடம் வந்தனர். எமது சக்திக்கு உட்பட்டவரை அவர்களுக்குத் தேவையான வசதிகளை நாம் செய்து கொடுத்தோம்.

அவர்களை உடனடியாக மீளக் குடியமர்த்தும் நோக்கில் நாம் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம். அவற்றுள் முக்கியமான ஒன்றுதான் அம்மக்களின் பகுதிகளில் புதைத்து வைக்கப் பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவது.

இந்தப் பணியை அனைவராலும் செய்யமுடியாது. ஆகையால், இப்பணி மெதுவாகவே இடம் பெறுகின்றது. உட னடியாக அம்மக்களை மீள் குடியேற்றும் சூழ்நிலை இல்லை.

தற்போதைய மழை வெள்ளத்திலிருந்து அம்மக்களைப் பாதுகாப்பதற்காக அவர்களைத் தற்காலிகமாக வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், கண்ணிவெடிகள் முற்றாக அகற்றி முடிக்கப் படும் வரை அவர்கள் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படமாட்டார்கள்.

இந்த மக்களை உடனடியாக மீளக் குடியேற்ற வேண்டும் என்பதற்காகப் பாதுகாப்பற்ற சூழலில் அவர்களை நாம் மீள்குடிய மர்த்த மாட்டோம் - என்றார்.

## யாழ்.மாவட்டத்தைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தை நிரந்தரவதிவிடமாகக் கொண் டவர்களே என்பதை பொலிஸ் மற்றும் சகல தரப்புக்களும் உறுதி செய்ததும் அவ ரது இடங்களில் உடன் மீள்குடியமர்த் தப் படுவர் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார் என்று கொழும்பு ஆங்கில இணையத்தளம் ஒன்று நேற்றுத் தெரிவித்தது.

மனிக்பாம் பகுதியில் தங்கியுள்ள யாழ். மாவட்ட மக்களை இனம் கண்டு அங்கு மீள் குடியமர்த்தும் பணிகளை அரசதரப்பு செய்து வருவதாகமனிதாபிமான அலுவல்களுக்கான ஐ.நாவின் இணைப்பு அலுவலகஅதிகாரிகளும் ஊர்ஜிதம்செய்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## அநுராதபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் அநுராத புரம், பொலநறுவை பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மலையகத்தில் இருந்து தொழில் நிமித்தம் இந்தப் பிரதேசங்களுக்கு வந்த தமிழ் இளைஞர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.இதேவேளை, இளைஞர்கள் எவரும் கைது செய்யப்பட்டுத் தமது பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட வில்லை என அநுராதபுரம், பொலநறுவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

### விற்பனையாகிறது

இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான 16 பக்கங்களை கொண்ட எதிர்பார்க்கப்படும் வினாக்களுடன் முழு மாதிரி வினாப்பத்திரம் விசேட

**வெற்றித் தேர்வு விலை** ரூபா 50.00

சகல புத்தகசாலைகளிலும் இன்றே பெறலாம் (நல்லூர் உற்சவகாலச் சிறப்பு விற்பனை நிலையங்களிலும்) (சி-560366)

### தேவை

பிரபலமான புத்தகக் கடைக்கு பின் வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

* பில் கிளாக்
* விற்பனையாளர் (சி-560372)

முன் அனுபவமுடையோர் நேரில் வரவும்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டரிஸ்
22, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு — மிகக் குறைந்த கட்டணங்களில்...
வெளிநாட்டு அழைப்புக்கள் 3/- முகம் பார்த்துக் கதைப்பதற்கு
அஸ்வினி மலர் பிளாசா
74, பலாலி வீதி, கோண்டாவில்
அழையுங்கள் : 021 567 7777

### மலிவு விற்பனை

கடந்தகால கற்சுசி வெளியீடுகள்
தரம் 1,2,3,4,5
அம்மா அன்னை தாய் அறிவு தேடல்
மற்றும் கணித + நுண்ணறிவு
வெளியீடுகளும் நல்லூர்த் திருவிழா சிறப்பு விற்பனை நிலையத்தில் மலிவு விலை
ரூபா10/=மட்டுமே
* இன்றும், நாளையும் மட்டுமே இச்சலுகை

கற்சுசி வெளியீடு
நல்லூர் திருவிழாச் சிறப்பு விற்பனை நிலையம்
பருத்தித்துறை வீதி, நல்லூர்

யாழ் மண்ணிலும் ஒலிக்கிறது...
▶ வெளிநாட்டு அழைப்புக்களுக்கு 7/-
▶ உள்வரும் வெளிநாட்டு அழைப்புக்களுக்கு 50 சதம் வழங்கப்படும்
லங்கா பெல்
முகவர் : அஸ்வினி மலர் பிளாசா
அழையுங்கள்: 021 567 7777

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு!!!
19.08.2009/20.08.2009/21.08.2009

முருகனே நல்லைக்குமரனே
உன் அருட்காட்சி கண்டு ஆனந்திக்கின்றோம்!

**MP3 PLAYER**
Orange 2 GB 2500/- 2200/-
2 GB (Display) 3750/- 2750/-

**MP5 PLAYER**
Orange 2 GB (Camera) 6000/- 5500/-
Sony 2 GB 4500/- 4000/-

**UPS**
Techcom 650 W 4000/- 3800/-
Intex 600 W 4400/- 4000/-
DCP 650 W 4200/- 3900/-
Power 3III 4200/- 3900/-
Tree 650 W 4750/- 4500/-

**SCANNER**
Mustek 1248 5500/- 5250/-
HP 2410 7900/- 7500/-
HP G3110 14500/- 14000/- (Negative)

**PROLINK**
Broadband 3.5 G USB HSDPA Modem (SIM) 10750/- 9900/-

**MONITOR**
CRT 17" 11000/- 10000/-
LCD 15" 10750/- 10250/-
LCD 19" 16500/- 15900/-

**SUBWOOFER**
Microlab 2.1 3000/-
Microlab 5.1 5500/-
Creative 2.1 2500/-
Creative 5.1 6750/-

**TV CARD**
Internal TV Card 3000/- 2400/-
CRT Combo TV Box 3900/- 2750/-
LCD Combo TV Box 5900/- 4900/-

**POWER SUPPLY**
400 W 1300/- 1100/-
500 W 1550/- 1250/-

**COMPUTER TABLE**
3000/- 2800/-
3500/- 3200/-
3750/- 3500/-

**NETWORK**
DLink Broadband Router (4 Port) 5750/- 5000/-
DLink Bradband Router (4 Port) Wireless 6900/- 6250/-
DLink Network Switch (8 Port) 3500/- 2500/-
DLink Network Switch (16 Port) 5500/- 4500/-

**RAM**
Kingston 1 GB (800) 1900/- 1700/-
Kingston 2 GB (800) 3500/- 3200/-

**PRINTER**
HP D1560 Colour 4500/- 4200/-
Canon IP1980 Colour 5500/- 5000/-
HP 1005 Laserjet 13900/- 13500/-
HP 4355 All in One 14750/- 14000/- (Printer, Scanner, Copier)

**PROCESSOR**
Intel 2.20 Ghz / 1M DualCore 8400/- 8000/-
Intel 2.50 Ghz / 2M DualCore 9250/- 8900/-
Intel 2.66 Ghz / 2 M DualCore 9500/- 9000/-
Intel 2.80 Ghz / 3M Core 2 Duo [illegible] 14750/-

**MOTHERBOARD**
Asrock G31 5700/- 5300/-
Foxconn G31 5900/- 5500/-
Asus P5KPL-AM 6750/- 6400/-
Intel DG31 PR 7500/- 7200/-
Longtron 478 6500/- 5600/-
Biostar G31 5900/- 5200/-

**CASING**
ATX Casing 3000/- 2600/-

**UPS BATTERY 12 V** 1400/- 1200/-

MUSIC WORLD & COMPUTERS (PVT) LTD.
* Stock Available * Warranty Value 1-3 years

இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிய நற்செய்தி!
ASP ENTERPRISES
முதன் முறையாக அறிமுகப்படுத்தும்
INDUCTION COOKER
அனுகூலங்கள்
# குறைந்த நேரம்
# சிக்கன மின்சாரம்
# தீ,மின் அபாயமில்லை
# இலகுவாகக் கையாளலாம்
# ஒரு வருட உத்தரவாதம்
# இதற்குரிய சகல உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்ளலாம்
# சர்வதேச தரச்சான்றிதழ் பெற்றது (ISO 9001 : 2000)
யாழ் மண்ணில் புதியதோர் உதயம்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்
கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0602001585, 0776079352

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.08.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

## பக்தர்களின் அன்பு வெள்ளத்தில் தேரேறி வருகின்றான் நல்லைக் கந்தன்

சிவபூமி எனப் போற்றப்படுகின்ற நம் ஈழவள நாட்டில், கந்தபுராண கலாசாரம் மிக்க யாழ்ப்பாணத்தில் வரலாற்றுச் சிறப்பு, பண்பாடு, கலாசாரம் மிகுந்த நல்லூரில் முருகப் பொருமான் கோயில் கொண்டெழுந்தருளி அடியார்க்கு அருள்புரிகின்றார்.

அழகுக் கடவுள் முருகப் பெருமான், அழகு பொலியும் அற்புத மண்டபங்களும் எழுச்சியும் உயர்ச்சியும் மிக்க கோபுரங்கள் அமையப் பெற்ற நல்லூர்த் திருத்தலத்தில் வீற்றிருந்தருள் புரிகின்றார்.

''கார் மயில் வாகனனைச் சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு தாழ்வில்லையே''

காலம் என்ற முத்துக்களை கந்தன் பால் சமர்ப்பித்துவிட்டால் ஒவ்வொருநாள்களும் எங்களுக்கு மங்களத் திருநாள்களாக அமைந்து விடும். ''காலம் பொன்னானது'' என்பதை மெய்ப்பித்துக் காட்ட இவ்வாலயத்தில் பூசைகள் நேரம் தவறாது இடம்பெறுவது சிறப்புமிக்கதொரு அம்சமாகும்.

நல்லைக்கந்தன் - மஹோற்சவம் ஆரம்பித்து விட்டால் யாழ். குடாநாடெங்கும் பக்தி வெள்ளம் கரை புரண்டோடும். திக்கெட்டும் மங்களம் பொங்கும். சிந்தையெல்லாம் தெய்வீகம் மணக்கும். நெற்றியெல்லாம் திருநீறு மணக்கும். திருவீதியெல்லாம் கற்பூரம் மணக்கும். அடியவர்கள் உள்ளமெல்லாம் பக்தி பெருக்கெடுத்தோடும்.

மேலான உற்சவமென்றும், மகோன்னதமான உற்சவமென்றும் போற்றப்படுகின்ற மஹோற்சவத்தின் மணிமகுடமாகத் திகழ்வது தேர்த்திருவிழா. நல்லைக் கந்தன் தேர் உற்சவம் யாழ்ப்பாணத்தின் தேசியத் திருவிழா என்று கூறப்படுகின்றது. இத்திருவிழாவில் முருகப் பெருமான் வள்ளி, தெய்வயானை சமேதராக சித்திரத்தேரிலேறிப் பக்தர்களை நாடி அருள்புரிய வருகின்றார். தேர்த்திருவிழா கூட குறித்த நேரத்தில் இடம்பெறுவதும் ஒரு சிறப்பம்சமாகும்.

பெருந்திருவிழாக் காலத்தில் மற்றைய திருவிழாக்களுக்கு வருகை தராத பக்தர்கள் மகோற்சவத்தின் சிகரமாகத் திகழும் தேர்த்திருவிழாவுக்குக் கட்டாயம் வருகை தருவார்கள். அந்த வகையில் தேர்த்திருவிழாவின் போது சைவத் தமிழ் மக்களின் உள்ளத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் தெய்வீக உணர்வும் பொங்கி எழும்.



முருகப் பெருமான் பிரபஞ்சமாகிய தேரின் உள்ளேயும், வெளியேயும் வியாபித்து நின்று அருள் மழை பொழியும் திருவருள் காட்சியை கண்குளிர, மணங்குளிரக் காணும் பாக்கியம் முருகப் பெருமானின் இன்றைய தேர்த்திருவிழாவில் பக்தர்களுக்குக் கிட்டுகின்றது.

திரிபுரசங்காரத்து உண்மை அர்த்தத்தை உணர்த்தி மனிதனின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை அழித்தல் என்ற வகையிலேயே இத் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. எங்களுடைய மும்மலங்களை வேண்டாத குணங்களை நீக்கிட நல்லைக்குமரன் சித்திரதேரிலேறி வருகிறார்.

நமது புராதன கலைச் செல்வங்களில் மகிமைக்குச் சான்றரகவும், நடமாடும் மரச்சிற்பமாகவும், அசைகின்ற கோயிலாகவும் தேர் அமைகின்றது.

தேரின் கோபுரம் மேல் நோக்கி குவிந்து செல்லும். தேர் கலச முடிவில் வெள்ளிக் குடை தெரிகின்றது. எமது மனம் ஒருமைப்பட்டு, ஒருமித்த சிந்தனையுடன் அழகுத் தெய்வம் முருகப் பெருமானைத் தியானித்தால் அவனது அருட்குடை நிழலில் துன்ப வெயில் நம்மைத் தாக்காது தடுக்கும்.

தேரின் பீடம் இதயத்தைக் குறிக்கும். முருகப் பெருமான் தேரின் பீடத்தில் வீற்றிருந்ததும் தேர் அசைகின்றது. எமது வாழ்க்கைத் தேர் சிறப்பாக ஓடுவதற்கு எமது இதய பீடத்தில் முருகப் பெருமானை எழுந்தருளச் செய்ய வேண்டும். எம் இதயம் என்னும் மண்ணில் முருக நாமத்தை விதைத்து அன்பு நீர் பாய்ச்சுகின்ற போது முருக பக்தி என்ற மரம் துளிர்த்துச் செழித்து வளரும்.

தேர்த் திருவிழாவின் போது ஏராளமான தேங்காய்கள் சிதற அடிக்கப்படுகின்றன.

எமது துன்பங்களும் சிதற வேண்டும் என்பதையே இது குறிக்கும். எங்கள் அகங்கார ஓட்டைப் பிளந்து உள்ளே இருக்கும் ஞானப் பருப்பையும் ஆனந்த இளநீரையும் காட்டிக் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுதலோடு முருகப் பெருமானுக்கு தேங்காய் உடைக்கப்படுகிறது.

''நாம் எல்லோரும் சீலமுறவேயிழுக்கும் தேரோட்டம் ஞாலமதில் நல்ல பிரமோற்சவமென்னும் நாமமுறும். 'எல்லோருக்கும்.. சேரும் இன்பம்!''

எனதேர்திருவிழாவின் சிறப்பை அறிஞர் கி.வா.ஜகந்நாதன் குறிப்பிட்டுள்ளார்.

நல்லைக் கந்தன் திருத்தேர் வடம் பிடிப்பது என்பது வாழ்வின் பெறுதற்கரிய பெரும் பேறாகும். அழகும், இளமையும், மணமும், தெய்வத்தன்மையும் நிரம்பிய முருகனின் திருவுருவம் ஆறுமுகங்களுடனும் பன்னிரண்டு திருக்கரங்களுடனும் பொலிந்து விளங்குகின்றது. அந்த ஈராறு கையழகனின் நாமத்தை 'முருகா' என உள்ளத்தினால் நினைத்துப் போற்றித் திருத்தேர் வடம் பிடித்திழுப்பவர்களுக்கு நிறைவான செல்வங்கள் கிடைக்கும். வியாதியால் பீடிக்கப்பட்டுத் துன்பப் படமாட்டார்கள்.


நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு- அதனால் நாட்டில் உள்ள பிணிகள் ஓடும் என்றார் நல்லூர் தேரடியில் சிவயோகப் பட்டறை அமைத்த தவ யோகி யோகர் சுவாமிகள். அவ்வாறு நாங் களும் தேரேறி வரும் முருகப் பெருமானை வணங்கி எங்கள் நாட்டில் துன்பங்கள் நீங்கி, அமைதியும் சாந்தியும் ஏற்பட வேண்டும் எனப் பிரார்த்திக்க வேண்டும்.

தமது சக்திகளாகிய வள்ளி, தெய்வயானை சமேதராக தேரேறி வரும் முருகப் பெருமானை உள்ளன்புடன் வழிபட்டால் எங்கள் வாழ்வு எப்பொழுதும் மலர்ந்த வாழ்வாக அமையும்.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள, அளப் பெருங் கரணங்கள் நான்கும் சிந்தையே ஆக, நல்லைக் கந்தன் தேர்த்திருவிழாவை கண்குளிரக் கண்டு தரிசித்து நாட்டில் அமைதியும், சாந்தியும் நிலவிட, எம் மனதில் நிறைந்துள்ளஅசுர குணங்களைப் போக்கி, சகல நற்பேறுகளும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

- உரும்பிராய் நந்தன் -

## வீரமாமயில் ஏறும் வேலவ



பல்லவி

வீரமாமயில் ஏறும் வேலவ - விளங்கு
கௌரி பாலகா - வா.

அநுபல்லவி

கானக் குறத்தி மகிழும் பாதா - காக்கும்
கடவுள் துதிக்கும் நாதா.

சரணம்

எனக்கும் உனக்கும் பேத மேனோ
எடுத்துச் சொன்னால் போதும் போமோ
மணக்கும் சோலை நல்லூர் வாசா
வணங்கும் யோகசுவாமி நேசா.

- நற்சிந்தனை.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்



## ஏனிந்த தாமதமோ எமக்கருள் புரிந்திடவே

தொல்லை வினை தீர்க்கும் ஞான பண்டிதா முருகா!
தோத்தரித்தோம் உன்னையே அருட்காட்சியது தாராயோ
எல்லையிலாக் கருணை தரும் ஈசன் திருமகனே
ஏனிந்தத் தாமதமோ எமக்கருள் புரிந்திடவே?
கல்லை யொத்த மனதினைச் கசிந்துருக வைத்தே
திருவீதி வலம் வருமெம் வள்ளி மணவாளா!
இல்லை யெனாதெமக்கு வரமருள வேண்டுமையா
நல்லை நகர்க் கந்தனே உன்பாதம் சரணடைந்தோம்

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்.

## நாவினிக்க முருக நாமம் சொல்வோம்

(காவடிச்சிந்து)

நல்லை நாதன் தாளினையே நாடித்து திப்பவர்க்கு
நன்மை செழித் தோங்குவதைப் பாரீர்- சென்று
நாமவனைத் தொழுதெழுவோம் வாரீர்

தில்லை நாதன் நுதல்வழியாய்த் திருஅவதா ரம்செய்தோன்
தீமைகளை வேரறுக்கும் சேந்தன்- தனது
திருவடியை நினைக்கவைக்கும் காந்தன்

செல்லப்ப ருள்ளிட்ட மெய்ஞானச் செல்வர்கள்
தேடிவைத்த செல்வமிங்கு உண்டு- அதனைத்
தேடிடுவோம் பக்திவல்ல கொண்டு

நல்லவரும் ஞானியரும் ஞானநட மாடுகின்ற
ஞானபூமி நல்லைப்பதி என்போம்- அங்கு
நாவினிக்க முருக நாமம் சொல்வோம்.

சீ. வெற்றிவேல்
வட்டுக்கோட்டை.


தேரேறி வரும் முருகா! மக்கள் துயர் போக்கிடப்பா!
செல்வி நகை அகம்
நம்பிக்கையான நாணயமுள்ள நகை வர்த்தகர்கள், நல்ல முறையில் உத்தரவாதத்துடன் நகைகளைச் செய்து கொடுப்பவர்கள்.
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்)

தேரேறி வந்திடும் தேவசேனாபதியே முருகா! தும்பிக்கையான் தம்பியே! நம்பிக்கைகொண்டோம் வா வா!
அசல் 22 கரட் நிரம்பிய நவீன வண்ணங்கொண்ட தங்கநகைகளை உங்கள் எண்ணம்போல தெரிவு செய்து நீங்கள் விரும்பும் தினத்தில் உங்களுக்குத் தருபவர்கள்
மிகப் பழைமை வாய்ந்த நம்பிக்கையான ஸ்தாபனம்
பொ. அம்பலவாணர் நகை மாளிகை
இல.119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பன்னிருகை வேலவனே முருகா! பக்தர் குறை தீர்க்க வேண்டும் கந்தா!
ANNA
“ஜீவாகாரம்”
JEEVAKARAM
வாழ்க்கை முழுவதும் வளமுடன் வாழ
★ வளர்ந்துவரும் குழந்தைகளுக்கும்
★ கர்ப்பிணித் தாய்மார்களுக்கும்
★ பாலூட்டும் தாய் மார்களுக்கும்
★ போஷாக்குக் குறைவான குழந்தைகளுக்கும்
இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஓர் உப உணவாகும்.
இல்லத்தரசிகளே! அண்ணா கோப்பி தயாரிப்புக்களை வாங்கி பாவித்து இன்புறுங்கள்!
★ குமரன் விபூதி
★ துர்க்கா பத்தி
சாயி சுகந்தா
★ ரோஸ் பத்தி
தேக ஆரோக்கியத்துக்குப் போசாக்கு நிறைந்த ஜீவாகாரம்
அண்ணா கோப்பி
அண்ணா அரிசிமா
அண்ணா அப்பம் மா
அண்ணா பற்பொடி
அண்ணா தோசைமா
அண்ணா கறிமிளகாய்த் தூள்
அண்ணா தொழிலகம்
இணுவில்.
குறிப்பு: 50 அண்ணா பற்பொடி வெற்றுக் கவர்களை உங்கள் வியாபாரியிடம் கொடுத்து ஒரு மணிப் பேர்சை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தேரேறி வரும் முருகா! மண்ணில் நீடித்து அமைதி பெற வேண்டும்
புகைப்படச் சுருள்கள் அனைத்தும் உடனுக்குடன் பிரதியாக்கம் செய்து பெற்றுக் கொள்ள
சுப்பர்ஸ் ஸ்ரூடியோ அன்ட் கலர் லாப்
இல. 194/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

## வரமளித்துக் காத்தருள்வாய்



வள்ளிபால் அன்பு வைத்த வள்ளலே
வானுயர வலம் வந்த வேலவனே
விடிவான சோதியே குமரனே
வீறு கொண்டு சூரனை அழித்த குகனே
வெற்றிக் கொடியோடுவந்த வடிவேல்னே
வேலுடன் மயிலோடுவந்த அழகனே
வையத்தில் விடிவளிக்கும் கந்தனே
வேலவனே மாலவனே வினை தீர்க்கும் தூயவனே
வடிவேலனே வள்ளி மணவாளனே
வாடிநிற்கும் அடியவர்க்கு
வரமளித்துக் காத்தருள்வாய்

திருமதி பி. செல்வா,
வட்டுக்கோட்டை.

## நல்லைக் கந்தன் தேரேறி வருகின்றான்



நல்லை நகர் வீதியிலே
கந்தன் தேரேறி வருகின்றான்
நலங்கள் பல அருளிடவே
தேரேறி வருகின்றான்.

என்றும் அமைதி நிலவ வைக்கத்
தேரேறி வருகின்றான்
இல்லை இனித் துன்பமென்றே
தேரேறி வருகின்றான்.

அல்லல் தீர்த்து எமைக்காக்கத்
தேரேறி வருகின்றான்
அடியவர்க்கு அபயமளித்தானத்
தேரேறி வருகின்றான்

நல்லதொரு தீர்வைத் தர
தேரேறி வருகின்றான்
நல்லை நகர் வீதியிலே கந்தன்
தேரேறி வருகிறான்.

க. நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

## எம்குறை தீர்த்தருள்வாய்

குன்றத்திலே குடியிருக்கும் குமரனே!
எம் வினையாவும் தீர்த்திடையா வேலவனே!
அடியவர்க்கு எளியவனாய் அருளும் முருகா!
நானிலத்தில் அல்லலுறும் மக்கள் தமைக் காத்தருள்வாய்
நல்லூர்ப் பதிவாழும் நல்லைக் குமரையா
கோல மயில் ஏறியே நீ குறைதீர்க்க வாருமையா!
பணிந்துன்னை வேண்டுகின்றோம், மால்மருகா, குமரா
பக்தர் குறை தீர்த்தருள்வாய் வேல் முருகா, குகனே!

*சி. சுபாங்கி, திருநெல்வேலி.*

## நல்லூர்க் கந்தனே நற்காட்சி தாருமையா...

திக்கெட்டும் அருளாட்சி புரிகின்றவன்
நல்லை பதியில் நம் குறையெல்லாம் களைகின்றவன்
வள்ளி மகளுடனே மயிலேறி வருகின்றவன்
எங்கள் துயர்தீர்த்து அருள்மாரி பொழின்றவன்
குன்றெல்லாம் குடிகொண்டு வாழ்கின்றவன்
நல்லையின் வீதியெலாம் நல்லாட்சி புரிகின்றவன்
தேரோடும் வீதியதில் தேடிநின்றோம் - உனைக்காண
நல்லை நகர் கந்தனே நற்கருணை தாருமையா....

*சு. விஜயராஜ்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

## குறைதீர்க்க வருவாயே!

வையகம் தன்னையே வானனோர் தானும்
வைரமும் முத்தும் மணியும் கலந்தொரு
கோடான கோடி செல்வம் கொடுப்பினும்
நல்லையம் பதியுறை வேலவா, உன்னை நான்
ஒருநாள் ஒருபொழுதாகிலும் மறவேன் காண்,
ஐயனே எனையாளும் தெய்வமே ஆறுமுகனே,
உன் திருக் கோலம் காணவிரு கண்கள் போதாதையா!

*தமிழினி,*
*பொலிகண்டி.*


தினம் மயிலேறி வலம் வந்து உலகத்தைக் காத்திடும் முருகா! இன்று தேரேறிப் பவனிவந்து எம்மவரைக் காத்திடுவாய் அப்பனே!

**அருள் விநாயகர் ரேடர்ஸ்**

இல.106, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5558

கிளை : இல.262, கண்டி வீதி, சாவகச்சேரி.
கிளை:- மெயின் வீதி, சங்கானை.

★ புத்தம் புதிய தரம்மிக்க மோட்டார் சைக்கிள்களா?
★ M.D. 90 மற்றும் ரீக் கொண்டிசன் மோட்டார் சைக்கிள்களா? ★ அவற்றுக்கான உதிரிப்பாகங்களா?
★ பற்றறி வகைகளா? ★ அஸிட் வகைகளா? ★ சோலர் வகைகளா?
இவை அனைத்தையும் ஓரிடமாகவே பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!



நல்லூரின் நாயகனே ஞான வடிவேலனே! எல்லோரும் உனைப் பணிந்தோம் ஏற்றமிகு வாழ அருள்வாய்!

**ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்**

ஏ-9 பாதையூடாக போக்குவரத்துச் சேவை

- பொருள்கள் ஒப்படைத்து 3 நாள்களில் கிடைக்கும்
- மிகக் குறைந்த கட்டணம்
- பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை
- எமது நிறுவனத்திற்கு முகவர்கள் எவரும் இல்லை.
- நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ESWARRAN

யாழ். குடாநாட்டிலிருந்து உள்ளூர் உற்பத்தி விவசாயப் பொருள்களைக் குறைந்த கட்டணத்துடன் கொழும்புக்குக் கொண்டு செல்லும் சேவை

★ தலைநகரிலும் யாழ்ப்பாணத்திலும் அலுவலகங்களைக் கொண்டு, புதிய லொறிகளுடன் செயற்படும் நூற்றுக்கு நூறு வீதம் உத்தரவாதம் அளிக்கக் கூடிய நிறுவனம்
★ இரு இடங்களிலும் தொடர்புகளைப் பேணக்கூடிய நம்பகத்தன்மை கொண்ட சேவை.

இன்றே நாடுங்கள்; உங்கள் சேவையை உறுதிப்படுத்துங்கள்

ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்
201,B, டாம் வீதி, கொழும்பு - 12.
T.P.: 0112433889, 0112435247, 0777674119


ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்
69/15, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2813, 021 222 4317


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்



## முருகன் ரதத்தின் பின் பலநூறு ரதங்கள்



கலை பெற்ற நலமோடு திருவருட் தெய்வீகக்
கருணை நலம் பெருகி வர
கண்ணைக் கவர்ந்திட்ட நவ மணிகள் கனகமொடு
காணு மலர்த் தோரணமுமாய்
நிலை பெற்ற தமிழரசு யாழ்ப்பாண நல்லூரின்
நிகரில்லாக் கலியுக வரதனே!
நீவரும் ரதபவனி நீள்வீதி வருசமயம் நின் ரதப் பின்புறமதாய்

குலைவுற்ற நெஞ்சத்து அடியார்தம் கண்ணிரில்
குறைவற்ற துயரத்தில்
காலக் கடும் சிற்பி தருகின்ற பலநூறு
கருமனோ ரதங்களையும்
அலைவுற்ற எமதுதுயர் ஆறுமுகன் அருள் நோக்கில்
அழியுமே இன்றைய தினம்
ஆனந்த சுக வாழ்வு அடைவோமே எனும் கனவுச்
சுமையுடன் வருகின்றனவே.

அமரர்-சே. ஈ. பரமேஸ்வரசர்மா, அராலி

## துணை நீயே கந்தா



ஏச்சுக்கும் பேச்சுக்கும் எள்ளளவும் அஞ்சாது
வீச்சோடு நாய்போசும் மூர்க்கரின்- தீச்செயலை
நண்ணாமல் ஓட்டி நம்மைக் காத்திடுவான்
கண்ணையான் கந்தன் துணை

ச. லலீசன், அச்சுவேலி.

## கோலமயில்மீது வருவாய்



**பல்லவி**

நல்லை நகர் ஆட்சி செய்யும் ஆறுமுகா
தொல்லை வினை தீர்த்தருள்வாய் தோகைமயிலா

**அனுபல்லவி**

வேலெடுத்து அசுரர்குலம் வேரறுத்தாய்
ஏன் எமது துயர் துடைக்க நீ மறந்தாய்

**சரணம்**



செல்லப்பன் வாழ்ந்த நல்லைத் திருப்பதியிலே
தேருறையும் வில்வ மரத்தளிர் நிழலிலே
யோகனுக்கு மோன நிலை காட்டி மகிழ்ந்தாய்
யோகிகளின் ஞான நிலைக் கருள் சுரந்தாய்

வேலுருவாய் கோலமயில் மீது வருவாய்
தேவசேனை வள்ளியுடன் தேடி வருவாய்
கோல நிகர் அழகொளிரும் குறிஞ்சிக் குமரா
கோடி கண்கள் தேடுதடா வந்து அருள்வாய்.

- கு.சரவணபவானந்தன், ஆனைப்பந்தி.


நல்லூர் வீதியிலே இன்று ரதபவனி! கண்டு களித்து வணங்கிட வாரீர்....!!
பலசரக்கு மற்றும் மிக்சர் தயாரிக்கும்
பொருள்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெறுவதற்கு
நாடவேண்டிய ஒரே இடம்
ஜெகன் களஞ்சியம்
இல.475, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

நல்லூர் நாயகனே! நலம் தர வா தேரேறி....
பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்பைவிட உறுதியான, அழகான வெண்சங்குப் பற் களைக் கட்டிட - இளைய தலை முறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப் பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட
யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்
கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.
எரிக்கணேஷ்
மூக்குக் கண்ணாடி அகமும் பல் கட்டுமிடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2486
கிளைகள்: பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல.80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.





அழகுத் தேரேறி வரும் ஆறுமுகன் அருள்பெற
அன்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்
அஜந்தாஸ்
ரெக்ஸ்ரைல்ஸ்
புத்தம் புதிய ஆடைத்
தெரிவுகளை நித்தம் நித்தம்
அறி முகம் செய்யும்
ஸ்தாபனம்
54, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
25.04, குறுக்குத்தெரு,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.







நல்லூர்க் கந்தனே தேரேறி வருக! வருக! வருக!
சிங்கப்பூர் ஜுவல்லறி
SINKAPOORE JEWELLERY
இல.93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 4590260

ஔவைக்கு பழம் கொடுத்த ஆறுமுருகா! உன் அடியவர்க்கு அருள் புரி வேல் முருகா!
TVS LANKA (Pvt.) Ltd.
அங்கீகாரம் பெற்ற யாழ். விற்பனை முகவர்




ஐங்கேசு மோட்டோர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்





North Link engineering
Dream Solutions

**North Link Engineering**

**#360/03, Main Street, Jaffna.**

Telephone : 021 - 2224099, Fax : 2224099 E-mail : northlink@sltnet.lk

**#20, 1st Cross Street, Vavuniya.**

Telephone : 024 - 2224537 Fax : 2225447

வடமாகாணத்திற்கான விநியோகஸ்தவர்களும், விற்பனைக்குப் பிந்திய சேவை வழங்குநரும் :

John Keells Office Automation (Pvt) Ltd., Office Net Work (Pvt) Ltd., Plus International (Pvt) Ltd, uni Walkers.ltd, South Asian Technologis(Pvt) Ltd.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

## நேராக நல்லூர் போங்கள்

நிம்மதி வேண்டும் என்றால்
நேராக நல்லூர் போங்கள்
உம்மனப் பாரம் எல்லாம்
உடனடியாக நீங்கும்

சும்மா நீர் சென்று பாரும்
சுந்தர முருகன்
தம்பால் ஈர்த்துக் கொண்டு
தன்னருள் தந்து நிற்பான்

வ.யோகானந்தசிவம்.

முருகா! நல்லைவாழ் முத்துக் குமரா! தேரேறி வருக! வருக!!
At major destinations around the island
Jaffna - Mount Lavinia - Trincomalee
[3 Locations in the Peninsula]
Tilko Holidays (Pvt Ltd)
TILKO Holidays
Hotels and Guest Houses



Jaffna City Hotel
* Comfortable Accommodations at Affordable Prices
* 50 A/C Non A/C Rooms
* Fully Air Conditioned Auditorium for any Occasion
70 / 6, KKS Road, Jaffna
(Near the General Post Office)
T.P: 021-222 5969 Fax: 021-222 7291
E-mail: tilkoholidays@yahoo.com

Guest House for budget accommodation
Mount Lavinia and Trincomalee
Mount La Villa
No: 65 Sangamitha Avenu
Mt'Laviniya, Sri Lanka.
T.P : 011 421 6428
Fax : 011 271 3803
Santhiga Villa
Lower Road, Trincomalee,
Reservations
Colombo or Jaffna Office

Branches hotel is to be opened at Balangoda
Experience the Service Excellence of TILKO HOLIDAYS staff with high standard of customer care - Stay in comfort - Travel in comfort.
Conduct usual business interactions -
TILKO HOLIDAYS provide the needful !

70 / 6, KKS Road, Jaffna, Sri Lanka.
Jaffna: 021-222 5969 Colombo: 011 271 3803
London: (++44) 020 8472 0092
E-mail: tilkoholidays@yahoo.com

## ஞானப்பழம் காணாத கண்ணென்ன கண்ணே!



சந்தனம்பன் னீருடனே சாதி மலர் கமழ
சந்த இசைப் பாடல் தரு கானமழ தினிக்க
வந்தனங்கள் செய்யுமடி யார்கள் மனம் சிலிர்க்க
வள்ளி தெய்வ யானையர்கள் வாஞ்சையுட னணைக்க
செந்தமிழர் சிந்தையினைத்தேடியருள் பொழியத்
தேரின் மிசை வீற்றிருக்குந் தெய்வமகன் நல்லூர்க்
கந்தனெழில் காணாத கண்ணென்ன கண்ணே
கருணை முகம் காணாத கண்ணென்ன கண்ணே!

செவ்லரிய சண்முகரின் தூய ஒளி பரவ
சுந்தரியர் இருபுறமும் சோபனங்கள் சொரிய
எல்லைமிகு மடியவரின் இதயமலர் விரிய
இளமுருக னெழில் முருக னெனப் பரவியுருக
நல்லைப்பதி வீதி நவ ரத்தினமாய் ஒளிர
நாடுமடி யார்பஜனை பாடி நட மாட
நல்லை ரதம் காணாத கண்ணென்ன கண்ணே
ஞானப்பழம் காணாத கண்ணென்ன கண்ணே!

மாலை மலர்க் குவியலிடை மாமணியைப் போலே
மால் மருகன் தேரின்மிசை மலர்ந்திருக்க அருகே
கோலமயில் போல இரு கோதையர்கள் மகிழ்ந்தே
குறுநகை செய் தேயடியர் கூட்டமெலாங் கவர
சீலமுறு நேசர்பலர் சேர்ந்து பணிவுடனே
தேரின்வடம் மெல்ல எடுத்தே குனிந்து இழுக்கும்
காலைமீனை காணாத கண்ணென்ன கண்ணே
கந்தன் ரதம் காணாத கண்ணென்ன கண்ணே!

-சிற்பி-

வண்ணமயிலேறி வள்ளி தெய்வானையுடன் தேரிலே
அருட்காட்சி கொடுத்து மக்களின் துயர்களைத் துடைத்திடையா!
உங்கள் இல்லங்களை
அழகுபடுத்த மனம்
கவரும் வர்ணங்களை
அள்ளி வழங்குகின்றது
asianpaints
ஏஷியன் பெயின்ற்ஸ் அக்ரிலிக் எமல்சன்
*நீண்டகால பாவனைக்கு, *மிருதுவான வேலைப்பாட்டிற்கு *கூடுதலான பரப்பளவிற்கு பூசக்கூடியது *பிரகாசமானதும், பளபளப்புத் தன்மை கொண்டதும் * கவர்ச்சி, மற்றும் தெளிவுமிகு வர்ணங்களைக் கொண்டதும் பாரிய எண்ணிக்கையிலான நிறவரிசை-பல்வேறு வர்ணங்கள்ளக் கொண்டதும். இவையெல்லாம் உங்களது பணத்திற்கும் மேலான பெறுமதி பரிபூரண மன நிம்மதி. 7வருட உத்தரவாதம். அத்துடன் வெயில், காற்று, மழையின் தாக்கத்திற்கு காக்கும் வகையில் உருவாக்கப்பட்டது தான்
ஏஷியன் பெயின்ற்ஸ் வேதர்ரவ் அல்ரிமா
(Asian Paints Weathertuff Ultima)
உங்கள் வர்ணப்பூச்சு தேவைகள் அனைத்திற்கும் உங்கள் பிரதேச ஏஷியன் பெயின்ற் விற்பனையாளர்களை நாடுங்கள்.
ஏஷியன் பெயின்ற்ஸ்
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்
யாழ்ப்பாண இரும்பகம்
32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல:-2227028

மாறாத கருணை எமக்கருள் கந்தா!
பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள், நாவல்கள்
அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விசேட கழிவுடன் நிதான விலையில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
244, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2573

தேரேறி வரும் தேவனே வினை! நீக்கியருள்வாய் வேலனே!
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்
சிறி மதனா நகை மாளிகை
மதனார் ஜுவல்லறி
இல.155/M, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:2227772
இல.173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 22225526

கானமயிலோனே! தேரேறி வந்து அடியார்க்கு அருட்காட்சி
கொடுத்திடுவாய் !!
நித்திய கல்யாணி
தங்கப்பவுண் நகை வியாபாரம் நகை மாளிகை
ஓடர் நகைகள் அசல் 22 கரட்டில் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்
205/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 4590214

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

## நல்லூரான் வீதி நடந்தாலே வினை தீரும்



ஈழமணித் திருநாட்டைச் சிவபூமி எனத் தவயோகி திருமூலநாயனார் தனது தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்திலே குறிப்பிட்டுள்ளார். சிவபூமியாகிய ஈழத்திலே முருக வழிபாடு மிகத் தொன்மைக்காலம் தொட்டுச் சிறப்பிடம் பெற்று வந்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாடு கலியுக வரதனாகிய கந்தவேள் பெருமானின் அருளாட்சிக்கு உட்பட்ட பிரதேசம் ஆகும். அலங்காரக் கந்தனாக நல்லூர் முருகன் ஆலயமும், அன்னதானக் கந்தனாக சந்நிதி முருகன் ஆலயமும், அபிஷேகக் கந்தனாக மாவிட்டபுரம் முருகன் ஆலயமும் திகழ்கின்றன. ஆடி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு மாவிட்டபுரம் முருகன் ஆலய மகோற்சவமும், ஆவணி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு நல்லூர் முருகன் ஆலய மகோற்சவமும், ஆவணிப் பூரணையைத் தீர்த்தமாகக் கொண்டு செல்வச்சந்நிதி முருகன் ஆலய மகோற்சவமும் இடம்பெறும். யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக இருந்த நல்லூரிலே சிறப்பு மிக்க முருகன் ஆலயம் செண்பகப் பெருமாள் என்னும் புவனேக பாகுவினால் கி.பி1454 இல் கட்டப்பட்டது. போர்த்துக்கீசத் தளபதி டி. ஒலிவரோ இவ் ஆலயத்தை இடித்து தரைமட்டம் ஆக்கினான். ஆலயத்தின் பெறுமதிமிக்க சொத்துக்கள் யாவும் அவர்களால் அபகரிக்கப்பட்டது. நல்லூர் முருகன் கோயிலை அந்நியர்களால் அழிக்க முடிந்ததே ஒழிய அவனடியாரது அகத்திலே வீற்றிருந்து அருள் புரிந்த ஞான பண்டிதனை அவர்களால் அழிக்கவோ, அசைக்கவோ முடியவில்லை. நீறு பூத்த நெருப்பு போல சைவப் பெருமக்களின் உள்ளத்திலே அகத்துறையும் அழகன் ஆகிய முருகன் வீற்றிருந்து அருளாட்சி புரிந்தான். "நம்பினார் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு" என்ற வாக்கிற்கு அமைய அடியார்களின் இதய சுத்தியான பிரார்த்தனை வீண் போகவில்லை. ஒல்லாந்தர் காலத்தின் பிற்பகுதியிலே கி.பி1734 ஆம் ஆண்டில் இன்று இருக்கும் நல்லூர் முருகன் ஆலயத்தைச் சிறிய மடாலயமாக அடியார்கள் அமைத்தார்கள். முருகப் பெருமானின் ஞானா சக்தியாகிய வேலைப் பிரதிட்டை செய்து வணங்கினர். அந்த ஆலயமே இன்று பெரும் தேசக்கோயிலாக சைவ மக்களின் உயிரோடும், உணர்வோடும் கலந்த மிகச் சிறந்த வணக்கத்தலமாக மிளிர்கிறது. நல்லூர் ஆலயத்தின் தல மகிமைக்குப் பல காரணங்கள் உண்டு. சித்தர்கள், ஞானிகள் ஆகிய பலர் நல்லூரான் வீதியில் நடமாடித் திரிந்தார்கள். இன்றும் திரிகிறார்கள்.

நல்லைக் கந்தனே, நாவலர் பெருமானின் குலதெய்வம். இத் திருத்தலத்திலே நாவலரின் மருமகன் வித்துவ சிரோன்மணி பொன்னம்பல பிள்ளை கந்தபுராணப் பாடல்களைப் படிக்க நாவலர் பெருமான் அவற்றிற்கு பக்தி சிரத்தையோடு பயன் கூற பல நூற்றுக் கணக்கான மக்கள் அதனைக் கேட்டுப் பயன் அடைந்த வரலாறு உண்டு. கந்தபுராணத்தின் பிறந்தகம் தமிழகம் என்றால் அதன் புக்ககம் ஆக யாழ்ப்பாணம் திகழ்ந்தது. நமது பிரதேசத்தின் ஆலயங்கள் எல்லாவற்றிலும் கந்தபுராணபடனம் நடைபெற்று வந்த காலம் ஒன்று நிலவியது. ஆலயங்களில் நடைபெற்ற கந்தபுராண படனத்தைப் பலரும் பக்தி சிரத்தையோடு காப்புக் கட்டி விரதமிருந்து கேட்டு வந்தார்கள். இதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைதி நிலவியது, தென்றல் வீசியது கந்தபுராணத்தைக் கைவிட்டதால்தான் நாம் கால் நூற்றாண்டு காலமாகப் பல்வேறு சோதனைகளையும், வேதனைகளையும் அனுபவித்தோம்.

நல்லைக் கந்தன் ஆலயத்திலே மகோற்சவம் ஆரம்பித்துவிட்டால் யாழ்ப்பாணக் குடாநாடே புனிதம் ஆகிவிடும். மக்கள் அனைவரும் ஆசார சீலர்களாக இருந்து வேலவனைப் பணிந்து வணங்குவார்கள் "நல்லூரான் வீதி நடந்தாலே வினை தீரும்" என்பார்கள். நல்லூர் வீதியிலே அங்கப் பிரதட்சணம் செய்து வழிபட்டால் வினைகள் எல்லாம் பொசுங்கி விடும். அதிகாலை நான்கு மணி முதல் பல நூற்றுக் கணக்கான இளைஞர்கள் முருக நாமத்தை உச்சரித்த படி நல்லூர் வீதியிலே அங்கப் பிர தட்சணம் செய்வார்கள்.

"ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத் தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே"

என்ற தாயுமான சுவாமிகளின் வாக்கிற்கு அமைய ஆடியும் பாடியும் அழுதும் தொழுதும் அடியார்கள் பக்திப் பரவசப்பட்டு நல்லைக் கந்தனை வணங்கும் காட்சியினை மகோற்சவ காலத்திலே காணலாம்.

சித்த புருஷர்களில் ஒருவராகிய மகான் செல்லப்பா சுவாமிகள் நல்லூர்த் தேரடியிலே குரு மூர்த்தமாக இருந்து அருள் வழங்கினார். செல்லப்பா சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்ற ஞானச் செல்வராகத் தவத்திருயோகர் சுவாமிகள் திகழ்ந்தார்.

மெய்யடியார்கள் நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப் போய் நல்ல மனத்தோடு வணங்கினால் அலங்காரக் கந்தனாகிய நல்லூர் முருகன் தோகை மயில் வாகனத்தில் வந்து அடியார்களுக்கு காட்சி கொடுப்பான். அவனுடைய அருள்காட்சி கிடைத்ததும் சிந்தையில் தெளிவு ஏற்பட்டுவிடும். சித்தம் அழகாகி விடும், சீவனுக்குள்ளே சிவமணம் பூத்துவிடும். சிவகதியும் கிடைத்து விடும்.

"நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப் போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் - நல்லமயில்
ஏறி வந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி"

என யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல் மேற்கூறிய உண்மைகளை விளக்குகின்றது.

தஞ்சமென வரும் அடியார்களுக்கு "யாமிருக்கப் பயம் ஏன்?" என நல்லைக் கந்தன் அபய கரத்தினைக் காட்டி ஆட்கொண்டு அருள் செய்கின்றார். அடியார்களின் பக்தி வலையில் நல்லைக் கந்தன் ஞான பண்டிதன் அகப்படாமல் போகமாட்டார்.

"யானும் பொய் என் நெஞ்சம் பொய் என் அன்பும் பொய் ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்ற மணிவாசகரின் தெய்வ வாசகத்திற்கு அமைய பக்தர்கள் உள்ளம் உருகிக் கண்ணீர் சொரிந்து நல்லைக் கந்தனை வணங்கினால் அவர்களுடைய வினைகள் எல்லாம் ஆதவனைக் கண்ட பனி போல அகன்று விடும் என்பதை

"பாராயோ வென்னை நீ பார்த்துக் கவலையெலாந்
தீராயோ செய்ய திருவேலா வாராயோ
மாமயிலேறி மகிழ்ந்து வரம் தந்து
சேமமுடன் காப்பாய் சிறப்பு"

என்ற நற் சிந்தனைப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

ஆறுமுகசுவாமி சித்திரத் தேரிலே பவனி வந்து தனது அருட் பார்வையால் எல்லாத்திக்குகளில் இருந்தும் தன்னை நாடி வந்த பக்தர்களின் துன்ப துயரங்களை நீக்கி அருளினை அள்ளிச் சொரிகின்றார். வேலவனைத் தஞ்சம் எனக் கொண்டால் அஞ்சுவதற்கு எதுவும் இல்லை என்பதை

"பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம்
வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே
ஆறுமுகன் தஞ்சமடி"

என யோகர் சுவாமிகள் தனது அருட்பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

நல்லைக் கந்தனின் மணியோசை நாதம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல கிராமங்களில் வாழும் மக்களிடம் முருகப்பெருமானின் நினைப்பை ஏற்படுத்துகின்றது. புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் நம்மவர்கள் எல்லாம் நல்லைக் கந்தனின் மகோற்சவ காலச்சிறப்புக்களை வானொலியில் கேட்டும் தொலைக்காட்சியில் பார்த்தும் அறிந்து கொள்கிறார்கள். ஈழ மணித் திருநாடு மீண்டும் சிவபூமியாக மாறவும், தமிழர் சமுதாயத்தின் வாழ்வில் சாந்தியும், சமாதானமும் நிலவவும், இந்த மண் புனித பூமியாகத் திகழவும், நல்லைக் கந்தன் உருவமாய். அருவமாய், உள் பொருளாய், இல் பொருளாய், மலராய், மலரின் நறுமணமாய், மணியாய், நாதமாய், கருவாய், உயிராய், நம்பினோர்க்கு கதியாய், குருவாய் வந்து அருள் புரிய வேண்டும். என நாம் அனைவரும் உள்ளம் உருகி அவனின் திருவடியைப் பிரார்த்திப்போமாக.

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

## மயிலேறி வந்து அருள்தா

வருவாய் வருவாயென் வள்ளி மணவாளா
தருவாய் தனமும் தகவும் தவயோகமும்
மருளாய்க் கிடந்து ன்காலடி தொழதேன்
அருள் மழை அமுதினை அள்ளிப் பொழிவாய் குகனே

முப்பொருளுண்மை உரைத்திட்ட முருகா
எப்பொழுதும் உனைத்துதிக்கும் எந்தனுக்கு
கருணை மலராமுன் அருட் பார்வையால்
உன்னத நல்வாழ்வு தந்தருள் முருகா!

வேற்றுமையில் என்றும் ஒற்றுமை காத்தெமக்கு
ஆற்றலை அளித்திடும் நல்லைக் கந்தா
வள்ளி தெய்வானை மணவாளனே யுனது
புள்ளி மயிலேறி வந்து வரமருள்வாய் கந்தா.

*சு.ஜான்சி, சங்கத்தானை.*

## தேவா நீ அருள்வாயே!

தேரேறும் முருகா உன் திருக்காட்சி காண வந்தேன்
தெவிட்டாத நின்புகழை அனுதினமும் ஓதிடுவேன்
பார்போற்றும் பாலகா ஆறு படைவீடு கொண்டவா
பக்தர்தம் குறைபோக்கத் தேரேறி நீ வருவாய்
கார் மேகக் குழலாடக் கயலொத்த விழியாடக்
கன்னியர்கள் இருவருடன் கருணையது பொழிவாயே
ஊரான நல்லூரில் உன்பக்தர் புடைசூழத்
தேரேறி வலம் வந்து தேவாநீ யருள்வாயே!

சரசாலையூரான்.

## மயிலில் ஏறுவாய் மக்கள் மனதில் ஆடுவாய்

நல்லை வேலவா, உந்தன் அழகைப் பாடவா
நல்ல தமிழின் இனிமை சேர்த்துக் கவிதை சூடவா
மயிலில் ஏறுவாய் மக்கள் மனதில் ஆடுவாய்
மருவும் வள்ளி தெய்வயானையோடு காட்சி நல்குவாய்
தினமும் துதிப்போம் இன்றுனைத் தேரில் ஏற்றுவோம்
தீர்த்தமாடி நாளை உன் கருணை மழையில் நனைவோம்.

சோ. வெண்ணிலவன்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

ASIAN FURNITURE
வள்ளி மணாளனே! தேரேறி வருக! வருக!
ஏசியன் தளபாடம்
அலுவலக, வீட்டுக்குரிய அனைத்து தளபாடப் பொருள்கள் எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
ASIAN TRANSPORT
COLOMBO JAFFNA - JAFFNA COLOMBO
ஆகாய மார்க்கமாகவும் தரைமார்க்க மாகவும் குறைந்த கட்டணத்தில் அனுப்பி வைக்கப்படும்.
தொடர்பு
JAFFNA
Asian Furniture
133, Power House Road,
Jaffna.
Colombo
Vaverset Place,
Wellawatta,
Colombo - 06.
077 3583879

நல்லைக் கந்தனே முருகா! தேரேறி வருக வருக திரு முருகா!
HOTEL SMS
Brown Road,
Kaladdi Junction,
Jaffna.

நல்லைக் கந்தா! தேரேறி வந்து பக்தர் குறை தீர்த்திடுவாய்
இளவரசி சேலைச் சோலை
(பட்டுப் புடைவைகளின் சாம்ராஜ்யம்)
ELAVARASI TEXTILE
(SPECIALIST IN WEDDING SAREES)
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
57, New market, Jaffna.
TP: 021 222 2503

"நல்லூரின் நாயகனே! ஞானவடி வேலவனே! தேரேறி வருக வருக!
ஏகாம்பரம் புடைவை மாளிகை
மொத்த சில்லறை புடைவை விற்பனையாளர்கள்.
(72) 9, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

"நல்லூரின் நாயகனே! தேரேறி வருக வருக!
மின்சாரப் பொருள்கள், எஸ்லோன் பைப் வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும், மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
செல்வா எலக்ரிக்கல்ஸ்
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.

நல்லூரின் நாயகனே! ஞானவடி வேலவனே தேரேறி வருக...!
உதயா ஜுவல்லர்ஸ்
தங்கப் பவுண் நகை வியாபாரம் உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும்
கண்கவர் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றிடச் சிறந்த ஸ்தாபனம்
UTHAYAA JEWELLERSS 81 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

## அருமருந்தனைய கந்தன்

ஆணவ மலத்தைப் போக்கும்
அருமருந் தனைய கந்தன்
காணவே கருத்தி னோடு
கண்ணதும் களிக்கு மன்றோ?

என்புடன் சதையும் சேர்ந்து
எழுந்த இம் மனிதயாக்கை
அன்புடை அழக னன்றி
அடைந்திடற் கேது முண்டோ?

அழகனாம் முருக வேளை
அனுதினம் ஆரா திக்கின்
அமைதியும் மகிழ்வும் வாழ்வில்
அமைந்திடும் காலம் நண்ணும்.

கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்.

## துதிக்கின்றோம் தாங்கித் துணைபுரிவாய்

பஞ்சவர்ண நீளிறகு மயிலதனை வாகனமாய்
பாரெங்கும் பறந்துவரும் பேற்றுடைய முருகா!
செஞ்சுடராய் ஆலயத்தில் அல்லும் பகலுமாய்
சீரோடு அரோகணித் தமர்ந்தருளும் கந்தா.
தஞ்சமென ஓடிவந்தோம் தாங்கித் துணைபுரிவாய்
துதிக்கைமுகன் தம்பியே துதிக்கின்றோம் உனையே
விஞ்சிவரும் துன்பமதை வேல் கொண்டு தீர்ப்பாயே!
வாஞ்சையுடன்வந்தோம் வழியொன்று கூறாயோ.

அல்வையூர்
கே.ஆர். திருத்துவராஜா





நல்லையம் பதி வேலவா! நலம் காக்கும் முருகா!
தேரேறிவந்து எம் குறைகளைத் தீருமையா!!

நஷனல், கௌவாய், டெவோ சாம்சாங் கொம்பிறசர்கள் மற்றும் குளிர்சாதன, காற்று சீராக்கி உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்

**சாயிராம்**
**வர்த்தக நிறுவனம்**

101, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:021 222 8105



**நியூ அசோகா அலுமினியம் பிற்றிங் சென்ரர்**

சகல விதமான அலுமினியக் கதவுகள்,மேசைகள்,ஜன்னல்கள் என்பன
வடிவமைத்துப் பெற்றுக் கொள்வதற்கும் நவீன முறையில்
அலுவலகங்கள் மற்றும் தொழிலகங்கள் என்பவற்றை
அலுமினியம் பிற்றிங் செய்து கொள்வதற்கும்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

தொழிலகம்:
மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

உரிமையாளர் : சி.சுதர்சன்

கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். தொ.பே: : 0777 177220, 077 3611229

தொ.பே : 0773609034

தேரேறி வந்து இன்னல்களை அறுத்திடுவாய்



**ரமணன்**
**கட்டடப் பொருள் விற்பனை நிலையம்**

சகல விதமான கட்டடப் பொருள்களை
நியாய விலைக்கு குறித்த நேரத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.



525, 528, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 222 9296

புள்ளி மயிலோனே முருகா சரணம்!




**ஆசைப்பிள்ளை அன்சன் நகை மாடம்**

22 கரட் தங்க நகைகளை ஒரே இடத்தில்
பெற்றிட நீங்கள் நாடவேண்டிய இடம்




இல.10, பஸ்நிலையம் முன்பாக, சங்கானை.

மரகத மயிலோனே மக்களின் துயர் துடைத்திடுவாயே!



**செ. இராசரத்தினம்**
**S.R.P பம்புகள்**




கே.கே.எஸ்.றோட், இணுவில்.

நல்லைநகர் வீதியிலே இன்று தேரேறிவரும் முருகா
நல்லருள் புரிவாய் நம் மண்ணில் நீடித்த அமைதி நிலைபெற



**சானுகா நகைமாடம்**
**Shanuga Nagai Madham**



200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அழகு நகைகளின் அரங்கம்

**கூட்டுறவு நகர்**

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

சிங்கார வேலனே தேரேறி வந்து பக்தர்களின் துயர் துடைத்திடையா!

**கூட்டுறவு நகர் I கூட்டுறவு நகர் II**



ஆகியவற்றின் விற்பனைப் பகுதிகளுடன் புடைவை வியாபாரத்திற்கான ஒரு தனிப் பகுதியையும்
ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இங்கிலாந்து, ஜப்பான், இத்தாலி போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட *Trouser Materials*, இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட *Khushboo* சல்வார் வகைகள் மிகக் குறைந்த விலைகளில்....... இப்பொழுதே விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

குறிப்பு: மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புவோர் யாழ். மாவட்ட [illegible] கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

## "ஏற்றம் அருள் சிவ சண்முகனே!"

பல்லவி

சிந்தனை யெலாமானாய் சிவசக்தி மைந்தா
சீர்வளம் கொழிக்கும் நல்லூர்க் குருநாதா!

அனுபல்லவி

முந்தை வினை தீர்க்கும் மூவிருமுக அழகா
எங்களுக்கு இரங்கிடுவாய் பன்னிருகை வேலா!

சரணம்

ஆற்றல் உடையோனே ஆண்டியாய் ஆனவனே
போற்றுதலுக் குரியஉம் தந்தைக்கு உபதேசித்தவனே
சீற்றம் மறந்திடுவாய் சிங்கார மயிலேறி அமர்ந்திடுவாய்
ஏற்றம் அருள் சிவ சண்முகனே சரணம்!
மூன்று காப்பவனே முக்காலமும் துணை வருவாய்
நல்லூரில் வாழ்பவனே நம் கருத்ததனில் நிறைந்திடுவாய்!
விண்ணில் வாழும் தேவர்களைக் காத்தாண்டாய் - இம்
மண்ணில் துயருறும் எம் துயர் தீர்க்க தேரேறி வந்திடுவாய்

என். பிரதித்தன்,
கோண்டாவில்.

## காணக் கண் பெற்றனன் ஐயனே!

நாதசுர ஓசையுடன்
தவில் நாதம் தான் முழங்க
தெய்வீக அந்தணர் தாம்
இசை வேதம் ஒப்பிக்க
அடியார் தம் கை கூப்பி
அரோகரா வென்றழைக்க
சந்தனமும் சூடமும் தன்
வாசனையை மெய்ப்பிக்க
அலங்காரக் கந்தனவன்
தேவியர் நற்புடை சூழ
தேரேறி வரும் காட்சி
மெய்சிலிர்க்க வைக்குதையா

- பாலகன்

நல்லைக் குமரா! தேரேறி வருக!!
தயா
அச்சகம்
138, நாவலர் வீதி
(மனோகராச் சந்தி),நாவலர்
பாடசாலை
முன்பாக,
யாழ்ப்பாணம்.

நல்லூர் நாயகனே!
தேர் மீது வந்து
திருவருள் தாரீர்!

இழந்த சக்தியை மீண்டும்
ரோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
PACKED BY: Industries
Colombo 12
அனைத்துப் பார்மஸிகளிலும்
ROYAL Pure Glucose
ஏக விநியோகஸ்த்தர்கள்:
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்.நகரில்
வஜீதா VAGEETHA
T.P.0779670441

கேட்பவருக்கு கேட்கும் வரம் அருளும் நல்லூர்க் கந்தனே! தேரேறி வந்து துயர் துடைப்பாய்!
அபிஷேக் மல்ரிஸ் போட்
இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக
கே.கே.எஸ்.றோட், மருதனார்மடம்.

ஓங்கார ரூபா ஓம் சரவணபவா! உன் அடியார் குறை தீர்க்க ஓடோடி வருக!
நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்குச் சிறந்த
ஸ்தாபனம்
சிறி சிவாஞ்சுனா
நகையகம்
இல. 149 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
sri sivanchchuna nakaiakam

BANK OF CEYLON
BOC
தேசத்தின் வங்கியாளர்
விநாயகன் தம்பியே!
நல்லைக் கந்தனே!
மக்கள் குறை தீர்க்க
தேர்ப்பவனி வருக! வருக!!

ஈசன் மைந்தா ஏறுமயில் வாகனா! இடர் போக்கி இன்னருள் தர இரதம் ஏறி வருக! வருக!
Maithely Nagai Madam
மைதிலி
Yarl Maithily
jewellers
நகைமாடம்
தங்க நகை வியாபாரி யாழ்.மைதிலி ஜுவலர்ஸ்
89 V, Kasthuriyar Road, Jaffna.
Sea Street Colombo -11.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

## தவறாது நினைந்து தவிர்க்கலாம் வினையே!

ஓரானை முகன் பின்னர் உதித்தான் தன்னை
ஒளிர்கின்ற திருவேலை உடையான் தன்னை
நீரானைத் தீயானை நிலனா னானை
நிறை வெளியாய் விண்ணாகி நின்றான் தன்னை
சீரானைப் போரொழியச் செய்வான் தன்னை
திருமுகங்கள் ஆறினொடு திகழ்வான் தன்னை
தாரானைத் திருநல்லூர்த் தலத்துள் ளானைத்
தவறாமே நினைந்துவினை தவிர்க்க லாமே!

தனங்கிளப்பு. வ. சின்னப்பா.

## கலியுக வரதா! காட்டுக மார்க்கம்

பிரமனைக் குட்டி சிறையினிலிட்ட பெருமானே! குருநாதா
யமன்தனைக் குட்டி சிறையிட்டிருப் பின் நலியுமே நம்மினம்
பழியோடு பாவம் படர்வினை யாவும் படைத்தனம் நாமே
இனியெமக்குறு கதி ஏதெனவறியோம் எழில்மிகு வேலா!
அழிவினில் நின்றெமை ஆண்டருள் செய்வாய் ஆறுமுகவா!
வலிவுறு கோல மயில் இசைமேவு வள்ளி மகிழ் காதலா
எழிலுறு நல்லையில் இனிதிருந்தருள் செய் ஏந்தலே!
கலியுக வரதா காட்டுக தமிழினம் தழைத்திடும் மார்க்கம்

திருமதி. த. சபாநாதன், நயினாதீவு.

## உன்னை வணங்கத் தவம் தா

நாயகனே! நல்லைப் பதியுறை நாவலனே
நம்பிக்கை கொண்டோரின் நற்பலமே!
தூயவனே! தொல்(த்) தமிழின் காவலனே
துயர் தீர்க்கும் அருமருந்தே!
சேயவனே! சேவற் கொடியுடை சீலனே!
சிந்தையிற் குடிகொள் செந்தமிழே!
தாயவனே! தங்க வேலுடைத் தத்துவமே
தரணியி லுனை வணங்கத் தவமேதா!

அரியாலையூர்
வே. ஐ. வரதராஜன்

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

## நல்லருள் செய்தென்றும் நலமே வாழவைப்பாய்



ஆறுபடைவீடு கொண்ட ஆறுமுகவேலவா
வீறு கொண்ட அசுரர் குலமழித்த குமரா
ஏறுமயிலேறி வள்ளி தெய்வானையுடன்
கூறுமடியார்கள் வினை தீர்த்தருள வருவாய்

சித்திரத் தேரேறி வீதியுலா வரும் வேலா
பக்திப் பெருக்கோடு வடம் பிடிக்கும் பக்தர்மனம்
தித்திக்கும் வண்ணம் அருள் முகங் காட்டிப் பல
சித்திகள் பெற்றிங்கு சிறப்பாக வாழ வைப்பாய்

அன்புடனே உனை வணங்கும் மெய்யடியாரை
ஆதரித்துக் காத்தருள வேண்டும் கதிர்வேலா
துன்பத்தால் நாளும் துடித்து வாழும் மக்களுக்கு
இன்முகங்காட்டி நல்வாழ்வு தரவருவாய்

எல்லையற்ற பரம்பொருளே எழிற்கந்தா
பல்கோடி பக்தருனை வேண்டித் துதிக்கின்றார்
நல்லை நகர்க் கந்தா நாடிவரும் அடியார்க்கு
நல்லருள் செய்தென்றும் நலமே வாழவைப்பாய்.

த.அப்புத்துரை, மட்டுவிலூர்.

## யாரோடு நோவர் உனையன்றி

பாரெங்கும் தமிழாகி
ஒளிர்கின்ற அழகே!
படை கொண்டு தேவர்களைச்
சிறைமீட்ட இறையே!
ஊர் திரண்டு உன் வாயில்
சார்ந்து குறை தீர
உந்தனையே வேண்டுகிறார்
கண்ணீரைச் சிந்தி!

யாரொடு நோவ ரவர்
தம் துயரைக் கூறி
யாமிருக்கப் பயமேன் எனும்
உன்னிடத்தில் அன்றி
தேரேறித் திரு நல்லைத்
தெருவழியாய் வரும் நீ
துயர்களைந்தேன் அருள் சுரந்தேன்
எனச் சொல்லிச் சிரியேன்....


வண்ண மயில் ஏறி வந்து வழங்கிடுவாய் உன் அருளை!
அழகுமிகு தங்க, வைர நகைகளை
22 கரட்டில் குறித்த தவணையில்
நவீன டிசைன்களில் செய்து
பெற்றிட நாடுவீர்
அலங்கார் நகை மாளிகை
21/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ALDI ELECTRONICS
No,15 Stanly Road Jaffna
முருகா மால் மருகா தேரேறும் வள்ளி மணாளா!!
தேரேறி மக்கள் துயர்துடைக்க வருவாய் முருகா!!
தரமான கணனி
கணனி உதிரிப்பாகங்கள்
கைக்கடிகாரங்கள் (ஆண், பெண்)
பழைய புதிய தமிழ் ஆங்கில திரைப்படங்கள்
பாடல்கள் காமெடிகள்
DVDs VCDs MP3s Audio CDs
MP3 MP4 Player
Computer Software Games CDs



தேரேறி வரும் நல்லைக் கந்தன்
சகல மக்களுக்கும் நல்லருள்
பாலிப்பாராக!
ஜவுளி உலகின்
முன்னோடிகளான
JEYECHANDRANS
The Art of Fashion
WELLAWATTE
No. 433, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 011 4528435, 011 4528438
Fax: 011 2362822
E-mail: info@jeyachandrans.com
Web: www.jeyechandrans.com

தேரேறிவந்து எம் உறவுகளின் துயர் போக்கிடுவாய்!
சிறி நதியா நகைமாளிகை
இல.01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
டிஜிற்றல் கலர்லாப்
வீடியோ & ஸ்ரூடியோ
லக்ஸன் பிளாசா கட்டடம், 108 A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 8412
இணை நிறுவனம் : சிறி நதியா நகை மாளிகை, 56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தேரேறி வரும் முருகா மக்கள் மனங்களை நிறைத்திட வா!
Manufacturers of Gold Jewels
பூரணி நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
வின்சர் தியேட்டர் அருகாமை,
இல:1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தேரேறி வரும் முருகப்பெருமானே வருக! வருக! மக்களுக்கு அருள் தருக! தருக!
PC SOLUTIONS
Our Strength is Your Satisfaction
கணனி சேவைகளுக்கான தனித்துவமான நிறுவனம்
PC SOLUTIONS
Computer Sales and Maintenance Centre
527/1, NAVALAR ROAD, JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

## வருவாய் வரம் தருவாய்

பரந்தாமன் மருமகனே பரமனின்
பாதம் பணிந்த தேவருக்காய்
அரனாரின் நெற்றிக்கண்
கனலால் உதித்த கந்தனே.
பொருதாய் பொல்லாச் சூர்படை
பொடிப் பொடி ஆகிடவே
குருவாய் தந்தைக்கு உபதேசம்
கூறி பெரியார்க்கு பெரியவனாய்
வறியவனாய் பழனிமலை ஆண்டியாகி
மொட்டை சாமியான சண்முகா
வருவாய் வரம் தருவாய்
வாழ் நல்லைப் பதியினிலே

அல்வாயூர்,
வி. வாணதி

## நல்லை வாழ் முருகே நீ வா

இன்னலுற்ற இமையின்றும் மிடியென்று சோராமல்
எழிலோங்க வரம் ஈய வா
வடிவேலுண்டு பயமில்லை கடிதோடும் வினையென்று
வளமோங்க மயில் ஏறி வா
கொடியுண்டு குறையில்லை விடிவென்ற தமிழுண்டு
குணமோங்க குகனே நீ வா
நாடியவர்க் கிடரில்லை வினையாவும் பலமென்று
நலமோங்க முருகே நீ வா

தென் புலோலியூர்
பரா.றமேஸ்.














நல்லூர்க் கந்தா! நலன்கள் பல தந்திடத் தேரேறி வருக! வருக!




அதிகூடிய முற்பணம் குறைந்த வட்டி

தங்கப்பவுணுக்கான முற்பணம்
24 கரட் தங்கத்துக்கு ரூ. 20,000/-
22 கரட் தங்கத்துக்கு ரூ. 17,500/-

வரிசை இல்லை. முத்திரை வரி இல்லை. ஆவணப்படுத்தல் தொல்லைகளும் இல்லை.

விரைவாக மீட்கலாம். தவணைக்கட்டண வசதி. முழுமையான இரகசியத்தன்மை.

மேலதிகப்பற்று/தனிநபர் கடன்/கடனட்டைகளை விட குறைந்த வட்டி.

தெரிவு செய்யப்பட்ட வங்கிக்கிளைகளில் சனி, ஞாயிறு தினங்களிலும் இச்சேவையை பெற்றுக்கொள்ளலாம்.

| | 30 நாட்கள் | 90 நாட்கள் | 6 மாதங்கள் | 12 மாதங்கள் | 05 வருடங்கள் |
|---|---|---|---|---|---|
| 50 வயதுக்கு உட்பட்டோர் | 12.5% | 13.5% | 13.5% | 14% | 18.5% |
| சிரேஷ்ட பிரஜைகள் | 13.5% | 14.5% | 14.5% | 15% | 19.5% |

இல.560, 562, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3047, 021 222 3755

செலான் தங்க நகை அடகுச் சேவை

உங்களுக்கு அவசரமாகப் பணம் தேவைப்படும் போது மிகவும் விரைவான தீர்வு செலான் அடகுச் சேவை மட்டுமே!

புதிய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் வழிநடத்தலில் புதுயுகத்தை நோக்கி......

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

தங்கம் உள்ளே பணம் வெளியே

GRACE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வங்கி அலுவல்களுக்காக...
அலுவலக நேரத்தை வீணாக்காதீர்!"



கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை இப்போது வருடத்தின் 365 தினங்களும் திறந்திருக்கிறது.

COMMERCIAL BANK

www.combank.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org